விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, மாசி 20 உ திங்கள் (3-3 69) துல்கஃதா 13 புத்தகம் 23 இதழ் 19




# அண்ணா சிலை நிறுவுவதற்கு தடை?

இலங்கையின் எப்பாகத்திலேனும் பொது இடங்களில் காலஞ்சென்ற தமிழ்நாட்டு முதலமைச்சரும் 6 கோடித் தமிழர்களின் இதயங்களில் இடம் பெற்று விட்டவருமான பேரறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிலை நிறுவுவதைத் தடை செய்ய வேண்டுமா என்பது பற்றி அரசாங்கம் இப்பொழுது ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகிறது,


இலங்கையின் பொது இடங்களில் எந்த இடத்திலாவது அறிஞர் அண்ணாவுக்குச் சிலை நிறுவுவதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என அரசாங்க, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த இனவெறி பிடித்த சிங்கள எம். பிக்கள் பலர் கோரியிருப்பதாகத் தெரிகிறது. திரு. ஆர். ஜி. சேனநாயகாவும் அண்ணா சிலை நிறுவுவதைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளாராம்.

''அண்ணாதுரையும் அவரது தி. மு. க. வினரும் பொதுவாக இலங்கையினதும், குறிப்பாகச் சிங்களவர்களினதும் ஆசைகளுக்கும் எண்ணங்களுக்கும் ஓர் சவாலாக விளங்கி வந்திருக்கிறார்கள். இன்றும் விளங்கி வருகிறார்கள். இலங்கையை தமிழ் நாட்டின் ஆட்சிக்குள் கொண்டு வந்து சிங்களவர்களை அடிமைப்படுத்தவேண்டுமென்பதே தி. மு. க. வின் திட்டம். அத்தகைய தி. மு. க. வின் மூலவரான அண்ணாதுரைக்கு சிங்கள நாடாகிய சிறீலங்காவில் சிலையெழுப்ப அனுமதிக்கக் கூடாது'' —இவ்வாறு சிங்கள எம். பிக்கள் சிலர் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அண்ணாதுரை சிலை நிறுவப்பட்டால் நாட்டில் இனக்கலவரம் மூளலாம் எனவும் சிலர் எச்சரித்துள்ளனராம்.

அண்ணா சிலை நிறுவ தடை விதிக்கப்பட வேண்டியது அவசியமா என்பதை அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது!

அமரர் அண்ணாவுக்கும் வன்னியசிங்கத்துக்கும் ஒருசேர சிலையெடுக்க தமிழரசு வாலிப முன்னணி முடிவு செய்துள்ளது. ஓிமலை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள தமிழ் அன்பர்களும் மட்டக்களப்பு மாநகர சபையும் அண்ணாவுக்குச் சிலையெடுக்க முடிவு செய்துள்ளனர்.




## தமிழரசு சார்பில் அண்ணா சமாதிக்கு
## இராசதுரை அஞ்சலி!

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பிலும், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் சார்பிலும் அறிஞர் அண்ணாவின் சமாதிக்கு சென்னையில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அண்மையில் தமிழகம் சென்றிருந்த மட்டு நகர் முதல்வர் செந்தமிழ்ச் செல்வர் செ. இராசதுரை தமிழரசுக்கட்சி சார்பில் அறிஞரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினர். (9-ம் பக்கம் பார்க்க)

## விரைவில் திறைசேரிச் சுற்றறிக்கை!

தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்கான திறைசேரிச் சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்பட இருக்கிறதென்றும் இப்பொழுது மொழிபெயர்ப்பு வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தமிழரசு மாநாட்டில்

## தமிழ்ப்பகுதி உற்பத்திப் பொருட்களின் கண் காட்சி!

ஏப்ரல் 7ம் 8ம், 9ம் திகதிகளில் நடைபெற விருக்கும் தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தமிழ் பேசும் மக்களின் அரசியல்வரலாற்றில் ஓர் திருப்புமுனையாக அமைய விருக்கும் இம்மாநாட்டின் வெற்றிக்கு இப்பொழுதிருந்தே தமிழரசுத்தொண்டர்களும் மாநாட்டு அமைப்பாளர்களும் எறும்புபோல உழைத்து வருகிறார்கள.

ஏப்ரல் 7ம் திகதி விஷயாலோசனைக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் ஓர் கண்காட்சியும் திறந்து வைக்கப்பட விருக்கிறது. இக் கண்காட்சியில் தமிழ்ப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட விருக்கிறது.

இக்கண்காட்சியில் தமது உற்பத்திப் பொருட்களும் இடம் பெறவேண்டுமென்று அபிலாஷை உள்ளவர்கள் மாநாட்டு அமைப்புச் செயலாளர்களான திருவாளர்கள் ந. அருணாசலம், ச. முத்துலிங்கம் ஆகியோரில் ஒருவருடன் உடனே தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்; 25, 2ம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்;

ஏப்ரல் 8ம் நாள் தொழிலாளர் மாநாடு, விவசாய மாநாடு, இலக்கிய மாநாடு மாதர் மாநாடு, கவியரங்கு ஆகியன இடம் பெறும்.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னோடு!

பா. பாலேஸ்வரி

## அத்தியாயம் (8)

அடுத்த நாள் புலருவதற்கு முன்பே ரகு எழுந்துவிட்டான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அங்கே அவனோடு கூடப்படுத்திருந்த மற்றவர்கள் நிம்மதியாகக் குறட்டையொலியுடன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். அவர்களைக் குழப்ப மனமில்லாத நிலையில் சிலமணிநேரம் எழுந்து உட்கார்ந்துவிட்டுத் திரும்பவும் படுத்துக் கொண்டான் அவன். அன்றையப்பொழுது குருவிகளின் ரீங்கார இன்னிசையுடன் புலர்ந்தபோது பிள்ளையார் கோயில் மணி டாங், டாங் என ஒலித்தது. அந்த மணியோசைகேட்டு ரகு எழுந்தபோது முதல்நாள் இரவு அவனுக்குப் படுக்கையும் போர்வையும் உதவிய பெரியவரும் எழுந்து கொண்டார். இருவரும் பேசிக்கொண்டே குழாயடிக்குச் சென்று முகங்கைகால் கழுவிக்கொண்டு பிள்ளையார் கோயிலுக்குப் பூசை காணச் சென்றனர். பூசைமுடிந்ததும் ரகு அழைத்ததன் பேரில் அவனுடன் சேர்ந்து அந்தப் பெரியவரும் தேநீர் அருந்தக் கடைக்குச் சென்றார். அவருக்காகிய பணத்தையும் ரகுவே முன்வந்து கொடுத்தபோது அந்தப் பெரியவர் அவனை நன்றியுடன் பார்த்து நீ என் பிள்ளையை விட நல்லவனப்பா, என்று வாழ்த்தியபோது ரகுவின் கண்கள் பனித்தன.

''தாய் தந்தையற்ற எனக்கு நீங்கள் கூட ஒரு அப்பா மாதிரித்தான். இன்று முழுவதும் நீங்கள் போகாமல் கோயில் மண்டபத்தில் அமர்ந்திருக்கவேண்டும். நான் இருக்கும்வரை இனி உங்களுக்குச் சாப்பாடு போடுவது என்கடமை ஐயா... நீங்கள் சென்று ஓய்வெடுங்கள், நான் மத்தியானச் சாப்பாட்டுடன் வந்து பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு தெருவில் இறங்கிக் கால்போன திக்கில் நடந்தான் ரகு. அந்தப் பெரியவரை அவன் சின்னையாவின் வடிவத்திற் கண்டான். சின்னையாவுக்குச் செய்யமுடியாத உதவியை அந்தப் பெரியவருக்குச் செய்வதில் அவனுக்கொரு நிம்மதி. அதனால் அந்தப் பெரியவருக்காக அவன் எங்காவது வேலை தேடும் நோக்கத்தோடு நடந்தான்.

அவன் கால்கள் அவனை முதல் நாள் இட்டுச் சென்ற கடற்கரைக்கே இழுத்துச் சென்றன. முதல் நாள்வலை இழுத்த இடம் வெற்றிடமாக இருக்கவே அவன் அந்தக் கடற்கரை யோரமாகச் சிறிது தூரம் நடந்தபோது சற்றுத் தூரத்தில் ஒரு வள்ளம் வருவது தெரிந்தது. அவன் அந்த வள்ளத்தின் வரவையே எதிர்பார்த்து நின்று வள்ளம் கரையை அடைந்ததும் அதை மணல் மேட்டில் ஏற்றுவதற்கு வேண்டிய ஒத்தாசை செய்தான்.

அந்த வள்ளம் நிறைந்த சூரன் மீன் பட்டிருந்ததால் அன்று அந்த வள்ளத்தைக் கரையேற்ற உதவி செய்த அனைவருக்கும் தலைக்கு இரண்டு சூரன் மீன் கிடைத்தது. ரகு அதைப் பெற்றுக்கொண்டு சென்ற வழியில் சூட்கோட் அணிந்த ஒரு இளைஞன் அதை மூன்று ரூபா கொடுத்து விட்டு ரகுவிடம் இருந்து பெற்றுக்கொண்டான். அன்றையப் பாட்டுக்கு அது போதுமானதாக இருக்கவே ரகு வந்த வழியே திரும்பி நடந்தான். அன்று அந்தப் பெரியவரும் அவனும் வயிறு புடைக்க உண்டனர். பெரியவர் அவனை வாயார வாழ்த்திய போது ரகுவால் சின்னையாவை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இப்படியாக ரகு இருவாரத்தைக் கடத்தினான். அதற்குமேலும் அப்படி இழிவாக வாழ்வதை அவன் விரும்பவில்லை. ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற சிந்தனையில் அவன் கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்தான். அக்கம் பக்கம் மற்றவர்கள் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர். இனிமேல் என்ன செய்வது என்று தலையைப் போட்டு அவன் உடைத்துக் கொண்டிருந்த போது அவ்வழியாக வந்த கோயில் குருக்கள் அவன் பக்கத்தில் வந்து நின்று அவனையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆகாயத்தில் அரைச் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்ததால் சுற்றுப் புறமெங்கும் பரல்போன்ற நிலவு எறித்துக் கொண்டிருந்தது. அதனால் ஒருவர் முகத்தை ஒருவர் நன்றாகக் கூர்ந்து பார்க்கக் கூடியதாக இருந்தது. ரகுவும் தன்னை வெறித்துப் பார்த்த குருக்களை முறைத்துப் பார்த்துவிட்டு நிலத்தில் தன் பார்வையைப் பதித்துக் கொண்டான். ''என்னடா பெரிய சண்டியனைப் போல முறைக்கிறாய். இந்தக் கோயில் வரவர கள்ளக் கூட்டத்துக்கு உறைவிடமாகப் போகிறது. இரவு கோயிலில் இருந்த ஒரு குத்துவிளக்கைக் காணாதபோதே நினைத்தன் இந்தப் பரதேசிக் கூட்டத்தில் ஒரு புதுப் பயல் சேர்ந்திருக்கிறான். அவன் தான் திருடியிருக்க வேண்டும் என்று, அது வீண்போகவில்லை. இப்போ நாளைய சாப்பாட்டுக்கு என்ன திருடலாம் என்று சிந்திக்கிறாயாக்கும்...? அதுதான் அந்தப் பெரியவரையும் உன் கைக்குள் போடப் பார்க்கிறாய். சீச்சீ சிந்தக் கள்ளக் கூட்டத்தை அப்புறப்படுத்தினால்தான் இந்தக்கோயில் உருப்படும். திருட்டுப் பசங்கள்...!'

அத்தனை நேரமும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த ரகு குருக்கள் வரம்பு மீறிப் பேசிய போது தன் பொறுமையை இழந்தான்.

''என்ன ஐயா நீங்கள் வாய்க்கு வந்தபடி பேசித் தள்ளுகிறீர்கள். கோயில் குருக்கள் என்று மரியாதை கொடுக்கப் போனால் நீங்கள் என்னை திருடனாக முடிவுகட்டி விட்டீர்கள். நீங்கள் சொன்னபடி திருட்டுத் தொழில் செய்திருந்தால் இந்தக் கோயில் மண்டபத்தில் படுத்துக் குளிரிலும் பனியிலும் நடுங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. அந்தத் தொழில் கேவலமானது என்ற ஒரேயொரு காரணத்திற்காகத்தான் நான் உடல் வருந்தி உழைத்து ஒருநேர உணவுடன் காலந்தள்ளி வருகிறேன் ஐயா... என் உயிர் போவதாக இருந்தாலுங்கூடத் திருட்டுத் தொழில்செய்ய மாட்டேன் என்னை நம்புங்கள். நான் நல்லாயிருந்தவன், ஏதோ விதிவசத்தால் இப்படியாகிவிட்டது. இன்னுமொரு முறைக்கு என்னைத் திருடன் என்று மட்டும் கூறிவிடாதீர்கள்...'' என்று குருக்களுக்கு ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தபோது ''டேய் எனக்கு நீ பிரசங்கமா செய்கிறாய்... உங்கள் எல்லோரையும் இந்தக் கோயிலை விட்டுக் கலைத்துப் போட்டுத்தான் நான் மறுவேலை பார்க்கிறது. பாவம் என்று கொஞ்சம் இடங் கொடுக்கப் போனால் அவன் என்னையே தட்டிப் பேச ஆரம்பித்து விட்டான். உம் எழுந்திரு... நீ முதல்ல இந்த இடத்தை விட்டுப் போ...... அப்புறம் நான் மற்றவர்களைப் பார்த்துக் கொள்கிறன்.....உம்... போகமாட்டாயாக்கும்... அப்ப பொலிசைத்தான் கூப்பிடவேண்டுமோ...''

குருக்களின் கோபம் உச்சநிலையை அடைந்தபோது அவரது பொறுமையை அதற்குமேலும் சோதிக்க விரும்பாத ரகு 'உங்களுக்கு அந்த சிரமம் எல்லாம் வைக்கவிரும்பவில்லை. நானுகவே போய் விடுகிறேன். நான் நேற்று வந்தவன் ஐயா... ஆனால் இவர்கள்! ஆமாம்! இங்கே படுத்துத் தூங்குபவர்கள் இந்தக் கோயிலையே தங்கள் உறைவிடமாக நம்பி வாழ்பவர்கள் அதனால் என்னால் அவர்களுக்கு வீண் தொல்லை உண்டாக்க வேண்டாம். நான் போய்விடுகிறேன். அவர்களைத் தயவு செய்து ஒன்றுஞ் செய்துவிடாதீர்கள் 'என்று பணிவுடன் கேட்டுக்கொண்டே ரகு அந்த இடத்தைவிட்டு நகரத் தொடங்கினான். 'திருட்டுப் பயல் போலிஸ் என்ற பெயர் கேட்டதும் பயந்து போய் ஓட்டம்பிடிக்கிறான்' என்று குருக்கள் கூறுவது அவன் காதில் தெளிவாகக் கேட்கிறது.

ரகுவின் உள்ளம் வேதனையால் துடித்து விடுகிறது. எங்காவது ஆற்றிலோ குளத்திலோ போய் விழுந்து அல்லது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு இறந்துவிட்டால் தேவலைப் போல இருக்கிறது. அவன் செல்லுமிடமெல்லாம் துரதிஷ்டமும் அவனைத் துரத்திக் கொண்டே வந்தது.

திருடன் என்ற பட்டம் பெற்றபின்பு இனிமேலும் அந்த ஊரில் வாழ்வது மரியாதைக் குறைவு என்ற எண்ணத்தில் அவன் ஏதோ ஒரு திடமான முடிவுக்கு வந்தவனாகக் கடற்கரையை நோக்கி நடந்தான். கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான். அவன் வாழ்க்கையில் ஒளி விளக்காகக் கலங்கரை விளக்கமாக இருந்த உமாவையே இழந்தபின் இப்படி ரோசங்கெட்டு ஒரு வாழ்க்[illegible] இதயத்தைக் கல்லாக்கியது.

உமாமட்டும் அவனுக்குக் கிடைப்பாள் என்ற நம்பிக்கை இருந்திருந்தால் அவன் எந்த அவமானத்தையுந் தாங்கிக் கொண்டு வாழத் தயாராக இருந்திருப்பான். ஆனால் இனி அவன் யாருக்காக வாழவேண்டும். எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டு வாழமுயற்சிக்க வேண்டும்...? இனி அவனைப் பொறுத்தவரை வாழ்வும் சாவும் ஒன்றுதான்.

அவன் கடற்கரையை அடைந்துவிட்டான். கடந்த ஒருவாரமாக நடந்து நடந்து அவனுக்குத் திருகோணமலையின் மூலை முடுக்குகள் எல்லாம் பாடமாகிவிட்டன. மூன்று முறை அவன் கோணேசர் ஆலயத்திற்குச் சென்றுளான். கோணேசர் மலையில் இருந்து கடலுக்குள் குதித்தால் கஷ்டமில்லாமல் மரணவேதனையை அனைத்துக்கொள்ளலாம் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் புனிதமான ஒரு கோயில் ஸ்தலத்தைக் களங்கப்படுத்த அவன் துளிகூட விரும்பவில்லை. வாழும்போதுதான் அவனால் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முடியாமற் போய் விட்டது. சாகும்போதாவது ஒரு நல்லகாரியத்தைச் செய்ய முடியாவிட்டாலுங் கூடக் கெட்ட காரியம் ஒன்றைச் செய்யாமல் இருப்போம் என்ற எண்ணத்தோடு வழக்கமாக அவன் அமர்ந்து கொள்ளும் மணல் மேட்டில் நின்றபடியே கடலைப் பார்த்தான். அதுமுன்னிலவுக்காலமாக இருந்ததால் சந்திரன் சிறுகச் சிறுகத்தன் ஒளியைக் குறைத்துக் கொண்டபோது எங்கும் காரிருள் சூழ்ந்துவந்தது. அத்துடன் மழைக்காலமாக இருந்ததால் விண்மீன்கள் ஒன்று கூட இல்லாமல் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது.

கடல் கோரமாகச் சத்தஞ்செய்து அலைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. அந்த அலைகள் கோணேசர் ஆலயத்தின் அடிவாரத்தைத் தழுவிக் கொண்டு வரும் அழகை அவன் பகல் வேளைகளில் நின்று பார்த்திருக்கிறான். குளித்திருக்கிறான் 'குரைகழலோதம் நித்திலங் கொழிக்குங் கோணமாமலை யமர்ந்தாரே'' என்ற சம்பந்தரின் கோணேஸ்வரப் பதிகத்தைப் பலமுறை இந்தக் கடற்கரையோரத்தில் தனிமையாக நின்று பாடிப்பரவசமடைந்திருக்கிறான். அந்தக் கோணேசர் ஆலயம் மலைஉச்சியில் பலவெளிச் சங்களோடு கெம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அவன் கைகள் அந்த ஸ்தலத்தை நோக்கிப் பக்தியுடன் சிரசில் குவிந்து கொள்கின்றன:

'கோணேசா காளித்தாயையும் உன்னையும் நம்பித்தான் இந்த ஊரில் கடந்த இரண்டு மூன்று வாரங்கள் காலந்தள்ளினேன் நீங்களே எனக்குத் திருட்டுப் பட்டஞ் சூட்டிய பின்பு நான் எதற்காக வாழவேண்டும் அப்பனே... இதோ நீ அளித்த பெரிய இயற்கைக் கொடை மக்கள் துன்பத்தின் எல்லையை அடையும் போது தன் மடி மீது அரவணைத்துக் கொள்ளும் பரந்த சமுத்திரம் என்னை அழைத்துக்கொள்ள ஆரவாரத்துடன் தயாராகிக் கொள்கிறது. தற்கொலை பாதகமான செயல் கோழைகளின் கடைசி ஆயுதம் என்று தெரியும். ஆயினும் எனக்கு வேறு வழி...? பிறந்த ஊரும் புகுந்த ஊரும் என்னை விரட்டிக் கலைத்த பின் எனக்கு வேறு யார் தஞ்சம் என அருளப் போகிறார்கள். அதனால் தான் இந்தக் கேவலமான முடிவுக்கு வந்தேன். இந்த வகையிலாவது எனக்கு நிம்மதிகிட்ட அருள் செய் இறைவா. என்னை மன்னித்து விடு என்று மூடிய கண்களுடனும் கூப்பிய கரங்களுடனும் அவன் வணங்கி விட்டு அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டே இரண்டடிகள் முன் வைத்து நடக்க எத்தனித்த போது அந்த இருளில் எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு உருவம் கடலை நோக்கி வேகமாகச் செல்வது அதன் அசைவாட்டத்தில் இருந்து அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. ஒருவேளை பேய் பிசாசாக இருக்குமோ என்று கூட எண்ணத்தோன்றியது அவனுக்கு. ஆயினும் அவற்றைக் கண்டு பயப்படும் நிலையைக் கடந்திருந்தான் அவன். அதனால் அந்த உருவத்தின் செயல்களையே ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினான்.

''கடவுளே இந்த ஊரில் தற்கொலைசெய்து கொள்ளக் கூட நீ தடைவிதிக்கிறாயா...? என் மனதை மரணத்திற்குப் பக்குவப்படுத்தியபின் எதற்காக இப்படி ஒரு குழப்பத்தை உண்டுபடுத்தி என் மனதைச் சபலமடையச் செய்கிறாய்...? என்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே வந்த உருவம் கடலைக் கிட்டிவிட்டது. கரையில் நின்றபடியே அது குனிந்து ஏதோ செய்வது அவன் கூரியகண்களுக்குத் தெரிந்தது. வல்வெட்டித்துறைப் பக்கம் இரவில் இருளோடு இருளாக இப்படித்தான் கள்ளக்கடத்தல் செய்வார்கள் என அவன் கேள்விப்பட்டிருந்தான். ஒருவேளை அப்படி ஏதாவது செய்யும் நோக்கத்துடன் வந்த நபராக இருக்குமோ என்று மிகவும் உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கினான். இருளில் ஆணோ பெண்ணோ என்று அவனால் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவன் நின்று கொண்டபோது அந்த உருவம் கடலுக்குள் இறங்கி நடக்கத் தொடங்கியது.

அதற்குமேல் அவன் பொறுமையிழந்து அந்த உருவத்தைப் பின்தொடர்ந்து கடலை நோக்கி ஓடினான். தன்னைப்போல விரக்தியடைந்த நிலையில் யாராவது தற்கொலை செய்ய வந்திருக்கலாம் என நினைத்தபோது அவன் உடல் பதறியது. அவன் கடலுக்குள் அந்த உருவத்தின் அண்மையில் வந்துவிட்டான். அவன் வந்த வேகத்தில் தண்ணீர் சலசலத்தபோது யாரோ தன்னை நோக்கி வருவதை உணர்ந்த அந்த உருவம் கண்ணைமூடிக் கொண்டு கடலுக்குள் ஓடத்தொடங்கியது. அதைத் தொடர்ந்து ரகுவும் ஓடினான்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாறன்,
கைதடி.

கே: பெரியோர்கள் எனக் கூறும் சிலர் சாதியெனும் வியாதி கொண்டு தமிழினத்தை கூறுபோடுகிறார்களே இவர்களின் இந்த வியாதிக்கு மருந்துண்டா?

ப:—சாதி வியாதி ஒழிய ஒரே மருந்துதான் எனக்குத் தெரிந்த வரையில் உண்டு. அதுதான் கலப்பு மணம்!

கே: தமிழர் தன் மானத்துடன் வாழப் பொன்னம்பலம் போன்ற துரோகிகள்?

ப: திருந்த வேண்டும்..

கே: தமிழ் அரசாங்க ஊழியருக்கு வேலை போகிறது. அரைச் சபாநாயகர் என்ன செய்கிறார்?

ப: தமிழ் அரசாங்க ஊழியருக்கு வேலை பறிபோனால் என்ன? போகாவிட்டாலென்ன? அரைச் சபாநாயகர் பதவி பறிபோகாத வரையில் அவருக்கு எதுகவலை?

கே: சாவகச்சேரித் தொகுதியில் அடுத்த தேர்தலில் அடுப்படியார் குதிக்கப் போகிறாராமே: அப்படியானால் தம்பி சிவானந்தன்...?

ப: மூன்று பட்டை நாமம் தான்!

வே. பூபாலசிங்கம்,
கைதடி வடக்கு.

கே: கம்பனைப் போல், வள்ளுவர்போல், அண்ணாவைப் போல், இளங்கோவைப்போல், இப்பூமியில் நான் யாரையும் கண்டதில்லை. யாராவது இருக்கிறார்களா?

ப: குறிப்பிட்ட கம்பனையும் வள்ளுவனையும் அண்ணாவையும் இளங்கோவையும் உருவாக்கிவிட்ட தமிழ்த்தாய் இருக்கிறாள்!

கே: நீர், இந்நாட்டின் பிரதமரானால், தமிழர்களை தலைநிமிர்ந்து நிற்கச் சொல்லுவீரா?

ப: நிமிர்ந்து நிற்கச் சொல்லமாட்டேன். நானே பிடித்து தலையை நிமிர்த்தி விடுவேன்! தானாக தலையை நிமிர்த்தும் மனோதிடம் இன்றைய தமிழனிடம் கிடையாது!

ஃ

எஸ். வி. எஸ்,
குருநாக்கல்.

கே: ஒரு மனைவி கணவனுக்கு தினமும் கடிதம் எழுதுவதன் அர்த்தமென்ன?

ப: கண்ணாடியொருத்தி நானிருக்கிறேன்- மாதவியை நாடி விடாதீர்கள் என்று கணவனுக்கு எச்சரிக்கை செய்வதுதான்!

கே: உண்மையின் பிறப்பிடம் எது?

ப: பொய் அழியுமிடம்!

கே: இலங்கையில் இன, மத மொழித்துவேஷத்தை தூண்டுபவர் யார்?

ப: 'சிங்களம் மட்டும்' கொள்கைக்காரர்கள்!

ஃ

ம. அன்ரன்,
மிருசுவில்.

கே: தற்போது மனிதன் உலகை எதில் காண்கிறான்?

ப: படாடோபத்திலும், வெளிப்பகட்டிலும்!

கே: மினிஸ்கேட் எதிர்ப்பு இயக்கம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: ஒன்றை எதிர்க்க எதிர்க்க அது வளர்ச்சியடையும். மினிஸ்கேட் எதிர்ப்பு இயக்கத்தால், மினிஸ்கேட்டுக்கு 'டிமாண்ட்' அதிகரிக்கும்!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு.

கே: அண்ணா மறுபிறப்பெடுத்து இலங்கையிற் பிறந்து இலங்கைத் தமிழர்களின் துயர்களை எல்லாம் துடைப்பதாகக் கனவு கண்டேன். என் கனவு பலிக்குமா?

ப: பலிக்காது. இலங்கையிற்தான், தமிழர்களை தட்டியெழுப்பி, தமிழினத்தின் உரிமைகளைப் பெற்று ஓர் தமிழரசு அமைத்துக்கொடுப்பதற்கு, எழுத்துக்காந்தி செல்வா இருக்கிறாரே. நமக்கு அங்கே என்ன வேலை என்றே அண்ணா நினைப்பார்!

கே: அண்ணாவின் மறைவையொட்டி ஒரேயொரு இரங்கல் செய்தி அனுப்புவதற்குகூட டட்லிக்கு மனம் வரவில்லையே...!

ப: டட்லி ஓர் தமிழரல்லவே...! ஆனால் ஜனநாயகம் ஜனநாயகம் என்று வாய்கிழியப்பேசும் பிரதமர், உலகில் சிறந்த ஜனநாயகத் தலைவர் என்ற முறையில் அண்ணாவுக்கு இரங்கல் செய்தி அனுப்பியிருக்கலாம்! அந்த அளவு பரந்த மனப்பான்மைகூட அவரிடம் இல்லாமற்போனது துரதிருஷ்டம் தான்.

கே: சிங்களத் தினிப்பின் வேகம் வரவர அதிகரிப்பது போல தெரிகிறதே:

ப: அதிகரிக்கட்டும். வேகமாக அதிகரிக்கட்டும். மாப்புளிப்பது அப்பத்துக்குநல்லதுதானே! அப்போதுதான் தமிழினத்தலவரின் கண் திறக்கும்!

ஃ

இராசதுரை,
கொழும்பு-6.

கே: தான் ஆசிரியராக இருந்தபோது சுதந்திரன் தரம் உயர்ந்திருந்ததாகவும் இப்போது குன்றிவிட்டதாகவும் கூறுகிறாரே தினபதி ஆசிரியர்:

ப: விளக்கபழைய குப்பையை கிளறுகிறார். அவர் ஆசிரியராகஇருந்த போதுதான், சும்மா இருக்க மாட்டாமல் இந்துக்களின் தெய்வங்களாகிய பரமசிவனையும் பார்வதியையும் சந்திக்கிழுத்து அவர்கள் கர்ப்பத்தடை செய்து கொண்டதாகஎழுதிகோடிக்கணக்கான இந்துக்களின் மனத்தை புண்படுத்தி சுதந்திரனின் தரத்தை குறைத்தார். அதுமட்டுமா? தமிழறிஞர்கள் 'நெட்டை நரி' போன்ற பட்டப்பெயர்களால் இழித்துரைக்கப்பட்டதும் அவர் காலத்தில் தானே!

ஃ

சு. சுப்பிரமணியம்,
கன்னாகம்.

கே: சுதந்திரனின் தரம் குறைந்துவிட்டதாகதுரோகிகள் கூப்பாடு போடுகின்றனவே!

ப: ஆமாம். சோற்றுக்காக இனத்தையும் கட்சியையும் காட்டிக்கொடுக்கும் துரோகசிகங்களின் முகத்திரையை கிழித்து துரோகத்தனத்தை சுதந்திரன் பிட்டுக்காட்டும்போது கூப்பாடு போடாமல் வேறு என்னதான் செய்வார்கள்?

ஃ

க. இராமசாமி,
கொழும்பு.

கே: தாம் ஆசிரியராக இருந்தபோது சுதந்திரன் தலையங்கங்களை அண்ணா திராவிட நாட்டில் மறுபிரசுரம் செய்ததாக பெருமையடிக்கிறாரே தினபதி ஆசிரியர்?

ப: அன்றுமட்டுமல்ல— இன்றுகூட, காஞ்சியும், முரசொலியும் நம்நாடும் மற்றும் தி. மு. க. ஏடுகளும் சுதந்திரன் தலையங்கங்களையும் செய்திகளையும் மறுபிரசுரம் செய்துவருகின்றன. தற்பெருமை தலைக்குமிஞ்சிவிட்டால் கண் தெரியாமல் போவது ஆச்சரியமல்லவே!

ஃ

எம். கமலாவதி,
கொட்டாஞ்சேனை.

கே: இலங்கையில் வெளிவரும் தமிழ்த் தினசரிகளில் தரங்குன்றிய பத்திரிகை தினபதிதானே!

ப: சந்தேகமில்லாமல்! முழுப் பொய்ச் செய்திகளைத் தயாரித்து வெளியிடுவது தரக்குறைவு அன்றி வேறென்ன?

கே: பத்திரிகா தர்மம் என்றால் என்ன?

ப: தினபதி ஆசிரியருக்கு தெரியாததொன்று!

கே: எஸ்! லிங்கம்,
குருநாகல்.

கே: தமிழ்நாட்டு தி. மு. க. தலைவர்கள் இலங்கை வர தற்போது ஏதாவது தடையுண்டா?

ப: அண்மையில் எஸ். எஸ். இராசேந்திரனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை மறந்துவிட்டீர்களா?

கே: இந்தியாவில் வாழும் தமிழர்களுக்கென ஓர் நாடு எடுத்துக்கொடுத்துவிட்டார் அறிஞர் அண்ணா. அப்படி ஒரு நாடு இலங்கைவாழ் தமிழருக்குக் கிடைக்குமா!

ப: நிச்சயமாக! அதற்குத்தான் தமிழரசுத் தந்தை தள்ளாத வயதிலும் இன்று போராடுகிறார்!

கே: இதுகாலவரை தலைவரை ஏகமனதாகத் தெரிவு செய்த தமிழ்அரசுக் கட்சிக்குள் இன்று தலைவர் தெரிவில் போட்டியும் பூசலும் வளர்கின்றதே, அப்படியானால் எதிர்காலத்தில் தமிழர் நிலை என்னவாகும்?

ப: தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியேற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு காரணம் பூசல், பிளவு என்பதல்ல— தமிழரசுக்கட்சி, கட்சியின் உள்மட்டத்திலும் சனநாயக மரபுகளை பின்பற்றுவது. எனவே தலைவர் தெரிவும் சனநாயக மரபுப்படி நடைபெறுகிறது. இதனால் கட்சிக்குள் பிளவு தோன்றும் என்று யாராவது எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாறுவார்கள். சனநாயக மரபுப்படி தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவரின்கீழ் கட்சி வேகமாக செயல்படும்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
191. ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12

## வளரும் எழுத்தாளர்கள் (5)

('பட்டணேந்து' என்றபுனை பெயருக்குள் மறைந்து நிற்கும் இளம் எழுத்தாளரான நவாலியூர் த. பரமலிங்கம், இங்கு சுதந்திரன் வாசகர்களுக்கு தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்ளுகிறார்.)

"சுதந்திரன்" வளர்த்துவிட்ட கவிஞர்கள், எழுத்தாளர்களில் நானும் ஒருவன். ஏனெனில், எனது முதல் படைப்புகளைத் தாங்கி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் ஒருகாலம் "சுதந்திரன்" அளித்தமையை மறக்க முடியாது.

நான் புனைந்த, "மலரே! மலரே! மலர்வாயே!" என்ற தலைப்பிலான முதல் கவிதை சுதந்திரன் 'வளர்மதி' என்ற பக்கத்தில் பிரசுரமானது. அதேபோல, நான் எழுதிய "வடு" என்ற முதல் சிறுகதையையும் "சுதந்திரன்" தனது சிறுகதைப் பகுதியில் பிரசுரித்தது.

1967—ம், ஆண்டு குருநகர் கலைக் கழகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசையும் 1968.ம் ஆண்டு காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதல் பரிசையும் கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசையும் பெற்றுள்ளேன்.

இதுவரை நூற்றுக் கணக்கான கவிதைகளையும்: இருபதிற்கும் அதிகமான சிறுகதைகளையும்: ஐம்பதிற்கும் அதிகமான கட்டுரைகளையும்: எழெட்டு நாடகங்களையும்: ஐந்தாறு உருவகக்கதைகளையும், ஒரு சிறுவர் தொடர் கதையையும், ஒரு கவிதை நாடகத்தையும், இன்னமும் துணுக்குகள், நகைச்சுவைச் சம்பவங்கள் பலவற்றையும் எழுதியுள்ளேன்.

எனக்கு, மரபு விதிகளுக்குள் ஆக்கப்படும் கவிதைகள், கதைகள், நாடகங்கள் பிடிக்கும். யதார்த்தம், எனக் கூறிக்கொண்டு அன்றாடச் செய்திக் கதைகளைப் புனைவதையும்; நம்ப முடியாத கற்பனைகள் (புழுகுகள்) நிரம்பிய துப்பறியும மர்மக்கதைகளையும் போலி வேடம் போட்டு சினிமாக் கதைகளைப் பக்கம் பக்கமாக எழுதிகுவிக்கும் எழுத்தாளர்களையும் பிடிக்கவே பிடிக்காது.



யாழ்—இலக்கிய வட்டத்தில் அங்கம் வகிக்கும் எனது புனைபெயர்கள் "நவாலியூர்க் கவிராயர்" "பட்டணேந்து" "பவானிமணாளன்" ஆகியன. எனது நாடகங்கள் வானொலியிலும், மேடைகளிலும் நடிக்கப் பட்டுள்ளன. எழுதுவதில் எனக்கொரு ஆர்வம். ஆனால் இத்தனைக்கும் நான் எழுதக்கூட நேரமில்லாதமுழுநேர தொழிலாளி.

# சுதந்திரன் தமிழ் தொண்டிற்கு பேராசிரியர் வாழ்த்து!

"வாராவாரம் சுதந்திரனை பேரார்வத்துடன் படித்து மகிழ்ச்சியடைகிறேன். சுதந்திரனின் தமிழ்த்தொண்டும் பொதுநலப்பணியும் மேலும் சிறந்தோங்கி வாழ்க; வெல்க; உயர்க. சுதந்திரனுக்கு என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்தும் பாராட்டும் உரியன. வாழ்க; வளர்க சுதந்திரன்!"

—மேற்கண்டவாறு, மைசூர் மாநிலம் கோலார் தங்கவயலைச் சேர்ந்த உரிகம் முதல் நிலைக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரான திரு. வ. பெருமாள் எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள ஓர் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் பெருமாள் அரசினர் ஆசியக் கலைமன்றம் (இலங்கை), தமிழ் எழுத்தாளர் சங்கம் (சென்னை) ஆகியவற்றில் வாழ்நாள் உறுப்பினராகவும், அனைத்துலக தமிழாராய்ச்சிமன்ற உறுப்பினராகவும், கோலார் மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் சிறப்பு ஆலோசகராகவும் விளங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ‘களை’ பிடுங்கும் காலம் வருகிறது!

இலங்கையின் ஏழாவது பொதுத் தேர்தல் எந்தநேரத்திலும் நடக்கலாமென கடந்த வாரம் பச்சைக்கொடி காட்டி விட்டார் நாட்டின் பிரதமர். இலங்கை சுதந்திரமடைந்த பின், எந்த ஒரு அரசாங்கத்தாலும் அரசியற்சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளபடி ஐந்து ஆண்டு காலத்துக்குப் பரிபூரணமாக ஆட்சியின் லகானை இதுவரை பிடித்திருக்க முடியவில்லை. ஒவ்வொரு தவணையும் பாராளுமன்றத்தின் ‘ஆயுள்’ குறுகி ‘குறைச்சாவு’கள் ஏற்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன.

ஆனால் இன்றைய பாராளுமன்றம், அதன் முழு வயது நிறைவுறும் வரை நீடிக்கும் என்றும், அதன் பின்னரே பொதுத்தேர்தல் நடைபெறுமென்றும் பிரதமர் அடிக்கடி கூறி வந்தது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததாகும். இப்பொழுது, பொதுத் தேர்தல் எந்த நேரமும் நடைபெறலாம் என்ற பிரதமரின் புதிய அறிவிப்பைப் பார்க்கும் பொழுது, இன்றைய பாராளுமன்றத்தின் காலமும் அரை குறை ஆயுளுடன் முடிவடையலாம் என்றே கருதப்பட வேண்டியுள்ளது.

வருகிறது பொதுத் தேர்தல் என்ற அறிவிப்பை தொடர்ந்து வானத்தை வில்லாக வளைப்பவர்களும், மணலைக் கயிறாகத் திரிப்பவர்களும் இனிப் பொதுமக்களிடம் வளைய வளைய வருவார்கள். முன் பின் தெரியாதவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் போலவும், பழக்கமில்லாதவர்கள் எல்லாம் நெடுநாட் பழகியவர்கள் போலவும், வாக்காளப் பெருமக்களை வட்டமிடத் தொடங்குவர்; வாக்காளர் அத்தனை பேரும் இனிச் சில காலத்துக்கு ‘‘இந்நாட்டு மன்னர்களாகி’’ விடுவார்கள்.

ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காகத் தென்னிலங்கையில் சிங்களக்கட்சிகள் புதிய தந்திரங்களில் இனி இறங்கலாம். தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக சில சிங்களக்கட்சிகள் கொடிய வகுப்புத் துவேஷ நஞ்சைக் கக்கலாம்—வேறு சில கட்சிகள், உருத்திராட்சப் பூனைபோல சிறுபான்மை மக்களிடம் அன்பும் பாசமும் காட்டுவது போல நடிக்கலாம்; தோசை வடை கோஷம் எழுப்பியவர்களின் வாய்களிலிருந்து இனி ஆசை மொழி வரலாம். இத்தகைய ஏமாற்று வித்தைகளில் சிக்காது தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையான மதிப்பும் கௌரவமும் அளிப்பவர்கள் யார் என்பதைக் கடந்தகால வரலாற்றைப் புரிந்துகொண்டு, தமிழரசுக்கட்சித் தலைவர்கள் காட்டுகிற வழியில் நடக்கத் தமிழ் பேசும் மக்கள் தயாராகவும் உஷாராகவும் இருக்க வேண்டும்.


சிறுபான்மை மக்களின் பூரண ஆதரவின்றி எந்த ஒரு சிங்களக் கட்சியும் ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முடியாதென்பதை 1960 மார்ச், 1960 ஜூலை, 1965 மார்ச் பொதுத் தேர்தல்கள் தெட்டத் தெளிவாகக் காட்டி விட்டன.

இந்நாட்டு அரசியலில் தமக்கிருக்கும் இந்த சக்தியை தொடர்ந்து காத்து வரவேண்டுமென்று சிறுபான்மை மக்கள் கருதினால்- இதற்கு முன் தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் கட்டுப்பாடாக எப்படி ஒன்று பட்டு ஐக்கியமாக நின்றார்களோ அதேபோல தொடர்ந்து நிற்கவேண்டும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, இன்றேல் வீழ்ச்சி தான். இத்தாரக மந்திரத்தை ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் எந்தக் கட்டத்திலும் மறந்து விடக் கூடாது.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை பொதுத் தேர்தலில் பங்குபற்றி பாராளுமன்றத்துக்குசெல்வது ஆட்சிபீடத்தைக் கைப்பற்றவல்ல; கைப்பற்றவும் முடியாது. ஆனால், தமது ஒன்றுபட்ட சக்தியையும், ஒரே கொள்கையையும் அகில இலங்கைக்கும் வெளியுலகுக்கும் தெரியப்படுத்தி- அமைதியான வழிகள் மூலமும், போராட்டங்களின் மூலமும், தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை இந்நாட்டில் நிலைநாட்டும் ஒரே குறிக்கோளுடனேயே தமிழ் பேசும் மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வருகிறார்கள்.

1956ம் ஆண்டிலிருந்து அதற்குப் பின் நடைபெற்ற ஒவ்வொரு பொதுத்தேர்தல்களிலும், தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் ஒரே கொள்கையின் கீழ் -ஒரே கட்சியின் கீழ் ஒன்று பட்டு ஒரே கட்சிப் பிரதிநிதிகளையே தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு அனுப்பி வருகிறார்கள்.

ஆம், தமிழரசுக் கட்சியை தங்கள் ஏகோபித்த பிரதிநிதித்துவஸ்தாபனமாகவும், சமஷ்டிக் கொள்கையை தங்கள் மாற்ற முடியாத ஒரே கொள்கையாகவும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் கடந்த நான்கு பொதுத் தேர்தல்களின் மூலமாகப் பிரகடனப்படுத்தி விட்டார்கள். அடுத்த பொதுத் தேர்தலிலும், தமிழ் பேசும் மக்கள் இது வரை அளித்துவந்த இதே தீர்ப்பை இன்னும் இறுக்கமாக அளிப்பார்கள் என்பதில் நமக்கு கிஞ்சித்தும் ஐயம் கிடையாது.




# வெந்த புண்ணில் வேல் சொருகுகிறார் பிரதமர்

## தமிழருக்குசமவுரிமை பெறும்வரை தனிச் சிங்கள எதிர்ப்பு ஓயாது

‘‘தமிழர்களுடைய தொண்டைக்குள் சிங்களத்தை திணிக்க சுதந்திரக் கட்சி அரசாங்கம் வடக்கே இராணுவத்தினரை அனுப்பவேண்டியிருந்தது. இன்று இரண்டு தமிழ் கட்சிகளும் சிங்களத்தை உத்தியோக மொழியாகஏற்றுக்கொண்டுள்ளன. அதற்கு இராணுவத்தை அனுப்பவேண்டிய நிலை ஏற்படவில்லை.’’

—இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா குளியாப்பிட்டியாவில் சென்றவாரம் நடைபெற்ற ஐ. தே. கட்சி மாநாட்டில் பேசியதாக ஓர் தமிழ்த் தினசரி செய்தி வெளியிட்டிருக்கிறது. பிரதமர் இப்படிக் கூறியிருப்பது உண்மையாக இருந்தால் இப்படிக் கூறிக் கொள்வதன்மூலம் அவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுகிறார் என்று அழுத்தம் திருத்தமாக முதலில் குறிப்பிட விரும்புகிறோம்.

‘‘அடுத்தவனால் முடியவில்லை. இதோ அதை நான் செய்துமுடித்துவிட்டேன்’’ என்று பிரதமர் பிரசாரம் செய்வது, வேண்டுமானால் சிங்கள மக்களிடம் அவரது கட்சிக்கு சில வாக்குகளை அதிகரிக்கச் செய்யலாம்.

சுதந்திரன்

ஆனால் அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் இந்நாட்டுத் தமிழ மக்களின் நெஞ்சங்களை வேல்கொண்டு தாக்குவதாக இருக்கின்றன என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்;

### தமிழ் விதிகள் தூங்குகின்றன

தமிழ்மொழிச் சட்டவிதிகளை நிறைவேற்றி சட்டப் புத்தகத்தில் தூங்கவைத்துவிட்டு, சிறிது சிறிதாக தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் அரசாங்கம் சிங்களத்தை மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுத்திவருவதைக் கண்டு தமிழ் பேசும் மக்கள் ஆத்திரமும் அருவருப்பும், வெறுப்பும் வேதனையும், அடைந்துள்ள இந் நேரத்தில் பிரதமரது இப் பேச்சு வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாக இருக்கிறது.

சிங்களச் சட்டத்தை தமிழர்கள் எந்த நாளும் எதிர்த்ததில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தைத் தான் அன்றும் எதிர்த்தார்கள். இன்றும் எதிர்க்கிறார்கள். என்றும் எதிர்த்துக்கொண்டேயிருப்பார்கள். இதைப் பிரதமர் புரிந்துகொள்ளவேண்டும்.

முந்திய அரசாங்கம்—சுதந்திரக்கட்சி அரசாங்கம்—வட கிழக்கு மாகாணங்களில் தனிச் சிங்களத்தை துப்பாக்கிமுனையில் தமிழ் மக்களின் தொண்டைக்குள் திணிக்கமுயன்றபோது—அந்த அராஜகத்தை, அக்கிரமத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ்ப் பிரதேசத்தில்ஒன்பது ஆண்டுகளாக தமிழ் மொழிப் போராட்டம் நடைபெற்றது—வடக்கு, கிழக்கில் சிங்கள ஆட்சி நுழையாமல் தடுக்கப்பட்டது. இது நாடறிந்த விஷயம்.

### திணிப்பை எதிர்ப்பர்

‘திணிப்பு’ என்ற வார்த்தையை தமிழ் மக்கள் எப்பொழுதுமே நஞ்சு போலக் கருதுபவர்கள். தமிழர்களிடம் துப்பாக்கி முனையில் என்றாலும்சரி, தட்டிக்கொடுத்து புகழ்ந்து பேசியும்சரி, தனிச் சிங்களத்தை எந்த அரசாங்கமும் திணித்துவிடமுடியாதென்பதை இங்கு அழுத்தமாக வலியுறுத்த விரும்புகிறோம். திணிப்பு எப்படி நடைபெற்றாலும் — அதை எதிர்த்து தமிழர்கள் இறுதி வரை போராடியே தீருவார்கள் என்பதையும் இங்கு இறுக்கமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

### தேசிய ஆட்சி தோன்றியபோது...!

1965ம் ஆண்டு டட்லி சேனநாயகாவின் தலைமை

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்களின் பிரதேச சுயாட்சிக்கு வழிவகுக்கக் கூடிய மாவட்ட சபைகளை நிறுவ தமிழரசுக்கட்சி போராடியபோது, அதை எதிர்த்து ஈனத்தனமாக நடந்து இனத்துரோகம் புரிந்தவர்கள் அத்தனை பேரும் தமிழ்ப் பிரதேச அரசியலிலிருந்து அடுத்த பொதுத் தேர்தலின் போது வேரோடு களையப்படுவார்கள் என்பதிலும் நமக்கு சந்தேகமில்லை.

பொதுத் தேர்தல் எந்தச் சமயத்தில் நடந்தாலும், தமிழ் பேசும் மக்களும் அவர்களுடைய ஒரே கட்சியான தமிழரசுக் கட்சியும், அதற்கு தயாராகவே இருக்க வேண்டும்.

‘மூன்று தலைக் கழுதைகள்’ என்று வர்ணிக்கப்படும் சுயேச்சைகள், எட்டப்பர்கள், இனத்துரோகிகள், காக்கை வன்னியர்கள்— தோசை வடை கோஷமெழுப்பிய இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்தவர்கள். யாவரும் தமிழ்ப் பகுதியின் அரசியலிலிருந்து அடுத்த பொதுத் தேர்தலுடன் முற்றாக அகற்றப்பட வேண்டும். இதற்கு ஒரேவழி தமிழ் பேசும் மக்கள் தங்கள் வாக்குச் சீட்டுக்களை சரியான முறையில் உபயோகிப்பதே.

சுருக்கமாகச் சொன்னால், அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ்ப்பகுதி அரசியலில் தப்பித்தவறி ஆங்காங்கே சென்ற பொதுத் தேர்தலின் போது விடுபட்டுப் போன ‘களை’களைப் பிடுங்கிவிடவேண்டும். தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றிபெற ‘‘இக்களை பிடுங்கல்’’ அவசியமும் அவசரமானதும் என்று கூறிவைக்க விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் காங்கிரஸ் சிங்களவர்களுக்கு தாளம் போடும் கட்சி"

## இந்த ஐயம் தமிழ் மக்களிடம் ஆழமாக பதிந்து விட்டது!

### தமிழரசுக் கட்சியே இன்னும் சக்திவாய்ந்த பெரிய இயக்கம்!

### டிறிபியூன் ஏட்டின் விமர்சனம்!

"தமிழ் மக்களிடையே, தமிழ் காங்கிரசை விட, சமஷ்டிக் கட்சிதான் மிக அதிகமான சக்தி வாய்ந்த மாபெரும் இயக்கமாக இன்னும் விளங்குகிறது என்பதில் துளியும் ஐயமில்லை."

"தேசிய அரசாங்கத்திட மிருந்து மொழி, பிரதேச சபைபோன்ற விடயங்களில் உருப்படியாக எதையாவது பெறுவதில்தமிழரசுக்கட்சி தோல்வியடைந்திருந்தாலும் கூட, தமிழ்காங்கிரசால், தமிழரசுக்கட்சியை அழித்துவிட முடியாது.

'தமிழ் காங்கிரஸ் சிங்களவர்களுக்கு தாளம் போடும் ஓர் கட்சியென்ற சந்தேகம் அளவுக்கதிகமாக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆழப்பதிந்து விட்டது. தமிழரசுக்கட்சி சொந்தபலத்துடன் தனது செல்வாக்கை காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்றும் காணப்படுகிறது"

—இவ்வாறு டிரிபியூன் ஏட்டில அண்மையில் வெளிவந்த அரசியல் விமர்சனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கொள்கை வளருது கோபுரம் போலே...!

சென்ற 29-1-69 முதல் 1-2-69 வரையிலும் காங்கேசன் துறைத் தொகுதியில், தந்தை செல்வாவும், திரு. அமிர்தலிங்கமும், அமைப்புச் செயலாளரும் தெல்லிப்பளை, காங்கேசன் துறை கீரிமலை, இளவாலை, மாவிட்டபுரம், மயிலிட்டி வறுத்தலைவிளான் அளவெட்டி, ஆகிய இடங்களில் புதிய கட்சிக் கிளைகளை நிறுவியுள்ளனர். ஆங்காங்கு போதியளவில் அரசியல் நிலையும் தெளிவாக்கப்பட்டது.

கூட்டங்களில் ஏராளமான கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் ஐயங்களை வெளிப்படுத்தினர். தங்கள் சிக்கல்களையும் தெரிவித்து அதற்கான விளக்கங்களையும் ஏற்றுக் கொண்டனர்.

இப்போது வட்டுக் கோட்டைத் தொகுதியிலும் கோப்பாய், உடுவிற்பெருகுதிகளிலும் கிளைகள் நிறுவப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு மாதர்முன்னணிக்கிளைகளும் நிறுவப்பட்டு வருகின்றன.

அளவெட்டி தெற்கு தமிழரசுக் கிளை செயற்குழு

தலைவர்:-திரு. ம. செல்லையா. செயலாளர்:-திரு. ஸ்ரீ முருகன் பொருளாளர்:-திரு. க. முத்தையா. உப. தலைவர்:-திரு. க. சிவநம்பு செயற்குழு:-திருவாளர்கள் சிவராசா நா. சுப்பிரமணியம் ஐ. க. தம்பிராசா. சி. சச்சிதானந்தன், மு. கதிர்காமத்தம்பி ஆ. க. காசிராசா.

கீரிமலை— கட்சிக் செயற்குழு

தலைவர்:-திரு. ந. சுப்பிரமணியம் செயலாளர்:-திரு. கனக. மகேந்திரா, பொருளாளர்:-திரு. த. கதிரேசு உப-தலைவர்கள்:-திரு. க. சிவலிங்கம் திரு. க. உமாபதி சிவம்

உப-செயலாளர்கள்:- சி. சபாநாதன் பெ. கந்தன், செயற்குழு:-திரு. சி. நடராசா. திரு. செபமாலை. திரு. பொ. கனகராசா திரு. எட்வின்ராசா.

## அண்ணாவும் நானும்

### சிலம்புச் செல்வர் ம. பொ. சி



தமிழக முதல்வர் — தமிழினத் தலைவர்—என் அரிய நண்பர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார். அவரது பிரிவு என்னை ஆறுத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அந்தத் துயரம் மறைய நெடுங்காலமாகும். என் வருங்காலப் பணிகளுக்கு அவரைத்தான் நான் வழிகாட்டியாகக் கொண்டிருந்தேன். என்னுடைய கொள்கை வழியில் அதற்கு வெற்றி தரும் வகையில் என்னை நடத்திச் செல்வார் என்ற நம்பிக்கையும் எனக்கிருந்தது. அந்த நம்பிக்கையின் சின்னம் மறைந்துவிட்டது. இத்துயரை எப்படி ஆற்றிக் கொள்வது? அவர் திரும்பி வந்தால் தான் ஆறும்.

நான் தேர்தலில் கலந்து கொள்ள மறுத்து வந்தவன், கடந்த நாற்பதாண்டு காலமாக! அப்படிப்பட்ட நான் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடக் காரணமாயிருந்தவர்கள்—அந்தத் திசைக்கு என்னை இழுத்துச் சென்றவர்கள் இருவராவர். அவர்களிலே ஒருவர் ராஜாஜி, இன்னொருவர் அண்ணா. அவர்களிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த காரணத்தால் — கொள்கை உடன்பாடும் இருந்த வகையால்—அண்ணாவைத்தான் நான் அதிகமாக நெருங்க வேண்டியிருந்தது. அப்படி நெருங்கித்தான் அவரைப் பின்பற்றிச் சட்ட மன்றத்திற்குள் நுழைந்தேன். என் அரசிருக்கை வெட்டில் என்னை அங்கு தனியே விட்டு விட்டு அவர் மறைந்து விட்டார்.

நாங்கள் இருவரும் ஒரே தொகுதியில்-அவர் நாடாளுமன்றத்துக்கும், நான் சட்டமன்றத்துக்கும்—போட்டி யிட்டோம். அந்த நிகழ்ச்சி எனது நெஞ்சிலே என்றும் பதிந்திருக்கும்.

உரிமை இழந்து வாழ்வது கொடுமை தான். அதனை என் வாழ்நாளில் நீண்ட நெடுங்காலம் அனுபவித்திருக்கிறேன்: தமிழ்மொழி உரிமை பெறும்வரை இன்னமும் அனுபவிக்கப் போகிறேன். ஆனால், அதைவிடவும் கொடிது உத்தமத் தோழரை இழந்து வாழ்வது!

எனது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிலே—எனக்கு வாழ்த்துக் கூறி — அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவு; அரசியல் துறையில் எங்களிடையே நிலவிய வேற்றுமையை விலக்கியது; ஒற்றுமையை உருவாக்கியது; ஒரே அணியில் எங்களை நிறுத்தியது. நான் பிறந்த இடத்தை—வளர்ந்த இடத்தை—எதிர்க்கும் துணிவை எனக்குத் தந்தது. இதோ, அன்று அவர் நிகழ்த்திய உரை: "

"நானும் ம. பொ. சியும் ஒன்றுபட்டுப் பணியாற்றுவதற்கான பிரச்சினைகள் ஆயிரக்கணக்கிலே தமிழ் நாட்டில் இருந்தாலும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆகையினால் மறுபடியும் படிப்பட்ட ஒன்றுபட்டுப் பணியாற்றத்தக்க பிரச்சினைகள் வருமானால், நிச்சயமாக ம. பொ. சி. அவர்கள் என்னைத் தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் பட்டியலிலே முதல் பெயராக இணைத்துக்கொள்ளலாம் என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அதைப்போலவே, ஒன்றுபட்டுப் பணியாற்றத்தக்க பிரச்சினைகளில் நான் அவரிடத்திலே ஒன்றுபட்டிருப்பேன் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

இதனை உரையென்று சொல்வது! இல்லை? அன்று எனக்கு அவர் தந்த உறுதிமொழி. உறுதிமொழி பெற்றவன் வாழ்கின்றேன். கொடுத்தவர் மறைந்துவிட்டார். அவர் தம்பியர்கள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

அண்ணாவின் தேசபக்தியைச் சந்தேகிப்பவர் இருக்கலாம். ஆனால், தமிழிடத்து அவருக்கிருந்த பற்றை பாசத்தை—இல்லை, பக்தியை சந்தேகிப்பவர் எட்டுத் திக்கிலே எவருமில்லை. இதனை, சத்தியம்செய்தும் சொல்வேன். இமயமலையின் உச்சியில் நின்றும் கூறுவேன். அவ்வளவு நம்பிக்கை வாய்ந்த — நண்பரை, தமிழ் பக்தரை, அதிகாரத்தில் நீடிக்க வைத்து—நிலைத்திருக்கச் செய்து—என் தாய் மொழிக்குப் புது வாழ்வு தேட ஆசைப்பட்டேன். இதைத் தவிர, வேறு எந்த ஆசையும் எனக்கு இருந்ததில்லை. வேறு எதற்காகவும் அவரிடம் அவரது ஆட்சியி[illegible] நான் இருக்கவில்லை, என்ன [illegible] துரதிருஷ்டத்தால் அவரது தலை சாய்ந்துவிட்டது: தெய்வம் கூட தமிழுக்கு எதிராகச் சதிசெய்கிறது போலும்! இதுதான் உண்மை என்றால் அந்தத் தெய்வத்தையும் எதிர்த்துப் போராட நான் தயாராக இருக்கிறேன்.

அண்ணா அவர்கள் என்னிடம் காட்டிய பெருமதிப்பை நினைக்க நினைக்க எனது நெஞ்சம் உருகுகின்றது. காந்தியடிகள் மறையும் போது தவிர, வேறு எந்த அரசியல் தலைவர் மறைந்த போதும், இன்று நான் கண்கலங்குவது போன்று, கதி கலங்கி நின்றதில்லை.

அண்ணாவிடம் எனக்கென நான் எதையும் எதிர்பார்த்ததில்லை என்றாலும், என்னை மதிப்போடு நடத்த அவர் தவறியதே இல்லை. தி. மு. க. வரலாற்றிலே— அதன்பால் சரித்திரம் சுமத்தியுள்ள பழியைப் போக்கும் வகையில்— முதன் முதலாக 1967 ஆண்டுப் பதினைந்திலே அதன் சார்பில் விடுதலை விழா கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1968 லும் கொண்டாடப்பட்டது: இந்த இரண்டு விழாக்களுக்குமே என்னை அழைத்துத் தலைமை தாங்க வைத்தார். அண்ணா, என்னை மட்டுமல்லாமல், என் தலைமையில் இயங்கும் தமிழரசுக் கழகத்தையும் மதிக்க அவர் மறந்ததில்லை. சட்டமன்றத்தில் என்னைக் குறிப்பிடும் போதெல்லாம் என் கழகத்தைக் குறிப்பிட— அவர் தவறியதில்லை.

ஆணவம் இல்லாத மனிதர். உழைப்புக்கு மதிப்புத் தரும் மனம் உடையவர் 'தமிழ் நாடு' பெயர் பெற்றதற்காக தி. மு. க. சார்பில் மகிழ்ச்சி விழாக் கொண்டாடியபோதும் அதிலே தலைமை தாங்கும் வாய்ப்பினை எனக்கே அளித்து, அதன் மூலம் என் கழகத்தைக் கவுரவித்தார். நானும் அவரும் ஒரே மேடையில் பேச நேர்ந்தபோதெல்லாம், தம் தம்பியரெல்லாம் பேசிய பின்னர் தாம் பேசுவதற்கு முன்னர் என்னைப் பேசச் செய்து எனக்கு தனி மதிப்பளித்து வந்தார். அவருடைய மாண்புக்கும் கல்விக்கும் நான் பெருமதிப்பளித்து வந்தேனென்றாலும், அதனால், அவர் ஆணவம் கொண்டதில்லை. ஒரு மூத்தவனை நடத்தும் முறையிலேயே நாங்கள் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் என்னை நடத்தி வந்தார். இவ்வளவு பெருமதிப்பினை வேறு யாரிடம் இனி நான் பெறப்போகிறேன்?

அடுத்துள்ள ஐந்தாண்டு காலத்திற்குள் தமிழர் வாழ்விலே, எங்கும் தமிழ்—எதிலும் தமிழ் என்ற நிலையை ஏற்படுத்தித் தருவதாக எனக்கும், என் மூலம் என் கழகத்துக்கும் சட்டமன்றத்திலே அவர் உறுதி கூறினார். அத்தகைய கோரிக்கை கொண்ட எனது திருத்தத் தீர்மானத்தை ஏற்றார். என் கட்சிக்கு நான் ஒருவன்தானே சட்டமன்றத்தில் என்று என்னை அலட்சியப்படுத்தாமல், எனது கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து அதனை ஏற்றுக்கொண்டார். அந்த ஐந்தாண்டு காலம் வரை கூட அவரை விட்டுவைக்கத் தெய்வம், சம்மதிக்கவில்லை போலும்.

அன்று கொடுத்த இந்த ஐந்தாண்டுகால உறுதிமொழி

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தோன்றியது எப்பொழுது?

உலகின் முதல் முதல் மக்கள் தோன்றிய நாடு தமிழகமும், அதனை அடுத்திருந்த கடல் கொண்ட தென்னாடுமே எனச் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

காவிரிப்பூம் பட்டினத்தில் நிலைத்து நின்று வாழும் தமிழ் மக்களை 'பதிநெடு நெறியாப் பழங்குடியினர்' என இளங்கோவடிகள் கூறுகிறார். இதற்கு உரை கூறவந்த அடியார்க்கு நல்லார் 'படைப்புக் காலந் தொட்டே வாழுங் குடியினர்' எனக் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் தோன்றிய காலத்தைக் குறிப்பிடும் பொழுது 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த குடியினர்' என ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் கூறுகிறார். இது கற்பாறைகள் தோன்றிய காலத்திற்குப் பின்னும், அது மழை பெய்து பெய்து கரைந்து மணலாகத் தோன்றிய காலத்திற்கு முன்னும் உள்ள காலத்தைக் குறிப்பிடுவதாகும். இத்தகைய மக்கள் பேசிய மொழியே தமிழ்.

## காலம்

தமிழ் மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. ஏனெனில் அது ஒரு காலங் கடந்த மொழி. அதற்கு வரலாறு இல்லை. எனவே அதன் தொன்மையை ஆராய்ந்து கூறுவதற்கில்லை, எனவே காவியமும் ஓவியமும் காவிரியும் வையையும், கட்டிடமும் சிற்பமும், கல்வெட்டும், புதைபொருட்களும் ஒருவாறு அதன் தொன்மையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

முத்தமிழ்க் காவலர்
**கி. ஆ. பெ. விசுவநாதம்**

உலக மொழி ஆராய்ச்சியாளர் சிலர் 'தமிழ் மொழியே உலகின் முதல் மொழி' எனக் கூறுவர். இன்னுஞ் சிலர் 'இலத்தீன், கிரீக் மொழிகளுக்கு முந்திய மொழி' எனக் கூறுவர், வேறு சிலர் 'இலத்தீன் கிரேக்க மொழிகளோடு ஒத்த காலத்திய மொழி' எனக் கூறுவர். இம்மூன்றில் எது உண்மையாகவிருப்பினும் அது தமிழின் தொன்மைச் சிறப்பைக் காட்டுவதாகவே இருக்கும்.

## பழைய மொழி

முற்காலத்திய சீன யாத்ரீகர் திரு. யுவான் சுவாங் பாகியான் முதல் பிற்காலத்திய ஜி. யு. போப், கால்டுவெல், வின்ஸ்லோ, டேய்லர் வரையுள்ள வேற்று நாட்டினர், வேற்று நிறத்தினர், வேற்று மதத்தினர், வேற்று மொழியினர் ஆகிய பலரால் தமிழின் பண்பட்ட தன்மை போற்றிப் பாராட்டப் பெற்றிருக்கிறது. இந்த அளவிற்குப் பாராட்டப் பெற்ற ஒரு மொழி உலகின் பழைய மொழிகளில் எதுவுமே யில்லை.

"தொன்னூல் விளக்கம்" என்னும் ஒரு அருமையான நூல் தமிழகத்தில் இன்னும் இருந்து வருகிறது. இதை எழுதியவர் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னே இத்தாலி நாட்டிலிருந்து இங்கு வந்த "பெஸ்கி பாதிரியார்" என்கிற திரு. வீரமாமுனிவர், இந்நூலைப் படிப்பதன் மூலம் மிகத் தொன்மையான பழந்தமிழ் நூல்களின் தன்மையை ஒருவாறு அறியலாம்.



## அவர் அறிந்தது அவ்வளவே

கடந்த உலகப் போரில் 'அடிஸ் அபாபா' என்ற நாடு வீழ்ச்சி அடைந்தது. அப்பொழுது ஓராயிரம் ஆண்டுகள் ஒரே இனத்தவரால் தொடர்ந்தாளப்பட்டு வந்த உலகின் பழமையான ஒரே நாடு வீழ்ச்சியடைந்தது என ஐரோப்பியப் பத்திரிகையாசிரியர் ஒருவர் தனது இதழில் எழுதியிருந்தார். பாவம் அவர் அறிந்தது அவ்வளவுதான். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் ஒரே இனத்தவரால் ஒரே மொழியால் தொடர்ந்து ஆளப் பெற்று வந்த நாடு தமிழ்நாடு, என்பதை அறிந்திருந்தால் அவர் அவ்வாறு எழுதுவாரா?

## தமிழ் வல்லரசு

1700 ஆண்டுகளுக்கு முன்பு சோழ மன்னர்கள் பலர் மலாயாவை, கடாரவை, சயாமைக் கைப்பற்றி ஆண்ட செய்திகளும், அவர்களில் முதலாம் குலோத்துங்கன் பர்மாவை ஆண்ட செய்தியும், சோழன் கரிகாலன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட செய்தியும் இலக்கியங்களாலும் வரலாறுகளாலும், கல்வெட்டுக்களாலும் அறியப்பெறும் உண்மைகளாகும். இதனால் தமிழ் மொழியானது அக்காலத்திலுமே உள்நாட்டை ஆட்சி புரிந்தும் வெளிநாட்டை ஆட்சி புரியும் ஒரு வல்லரசின் ஆட்சி மொழியாகவும் இருந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது.

2000 ஆண்டுகளுக்கு முன் [illegible] பற்றி எழுதியிருக்கும் குறிப்புகளில் பல தமிழ்ப் பெயர்கள் காணப் பெறுகின்றன.

2300 ஆண்டுகளுக்கு முன்னைய சில பிராமியக் கல்வெட்டுகள் தமிழ் மொழியிலேயே எழுதப் பெற்றிருக்கின்றன.

2400 ஆண்டுகளுக்கு முன்புள்ள பாணினி காலத்திலேயே தமிழில் நற்றிணை என்னும் சிறந்த இலக்கண நூல் தோன்றியிருக்கின்றது.

2600 ஆண்டுகளுக்கு முன்னுள்ள வான்மீகி காலத்திற்கு முன்பே தமிழில் அகமும், புறமும் தோன்றியிருக்கின்றன.

2800 ஆண்டுகளுக்குமுன்பு ரோமாபுரியை ஆண்ட ஏழாவது சாலமோன் காலத்திலேயே தமிழ்நாட்டிலிருந்து, தமிழ்நாட்டுக் கப்பல்களில், தமிழ்நாட்டுப் பண்டங்களை, தமிழ்நாட்டு வணிகர்கள் கிரேக்க நாட்டிற்குக் கொண்டு சென்று தமிழ் மொழியிலேயே விலை பேசி விற்று வந்திருக்கின்றனர். அப்பொருள்களுக்கு இன்றும் தமிழ்ச் சொற்களே வழங்கப் பெற்று வருகின்றன. அரிசி 'ரைஸ்' எனவும் மயில் தோகை 'டோகை' எனவும், சந்தனம் 'சான்டல்' எனவும், தேக்கு 'டீக்கு' எனவும் கட்டு மரம் 'கட்டமரான்' எனவும், இஞ்சி 'ஜிஞ்சர்' எனவும் அனைக்கட்டு 'அனைக்கட்' எனவும், ஓலை 'ஒல்லா' எனவும், கயிறு 'காயர்' எனவும், மாங்காய் 'மேங்கோ' எனவும் ஆயின. காலப்போக்கில் இத்தமிழ்ச் சொற்கள் அவர்களின் சொற்களாக மாறி பிரஞ்சு, ஆங்கில அகராதிகளிலும் புகுந்து கொண்டு விட்டன.

## தொல்காப்பியம்

3000 ஆண்டுகளுக்கு முன் உள்ள நூல்களில் இன்று நம்மிடையே சிறிதும் அழியாமல் முழுவதுமாகக் கிடைத்துள்ள நூல் 'தொல்காப்பியம்' ஒன்றே. அதற்கு முன்னும் பல இலக்கண நூல்கள் தோன்றியிருக்கின்றன. இவ்வுண்மையை 'என்ப' 'என்மனார் புலவர்' 'யாப்பென மொழிப யாப்பறி புலவர்' 'தொலென மொழிப தொன்மொழிப் புலவர்' என தொல்காப்பியரே தமது நூலில் கூறியிருப்பதால் நன்கறியலாம்.

## அகத்தியம்

3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியாக நம்பப் பெறுகிற நூல்களில் 'அகத்தியம்' எனப்படும் தமிழ் இலக்கண நூல் [illegible]. இதை 5000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது, 7000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது, 9000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது எனக் கூறுவாரும் உண்டு.

'அகத்திய'த்தைச் செய்தவர் அகத்தியர், இவர்தான் தமிழ் மொழியை கண்டுபண்ணியவர் எனவும், இவர் அகஸ்தியர் என்ற வடமொழி அறிஞர் எனவும் சிலர் கூறுவர். அவர் அறியாதவர். அக்கருத்து நல்லறிஞர்களால் கொள்ளப்பெறவில்லை. 'தமிழ் என்றும் உள்ளது, அகத்தியர் அம்மொழியைப் படித்து, அறிந்து புகன்று புகழடைந்தவர்' எனக் கூறியாக வேண்டும். இவ்வுண்மையை 'என்றும் உள தென்[illegible] இயம்பி இசைகொண்டான்' என்ற அகத்தியரைப் பற்றிய அவரது வாக்கே மெய்ப்பிக்கும்.

தமிழ் மன்னர்களை[illegible]மிழ்ப் புலவர்கள் வாழ்த்தும் பொழுது அவரவர் ஆற்று மணல்களின் எண்ணிக்கையைவிட அதிகமான ஆண்டுகள் வாழவேண்டும் என வாழ்த்துக் கூறுவது மரபு. அவ்வாறு சேரருக்கு 'பொருநை'யும், சோழருக்கு 'காவிரி'யும் போல பாண்டியர்க்கு 'வையையைக்' கூறாமல் 'பஃறுளி மணலினும் பலவாய்ச் சிறக்க நின் ஆயுள்' என கடல்கோளுக்கு முன்னுள்ள குடும்பத்துப் பாண்டியரை புலவர் நச்செள்ளையார் வாழ்த்தியிருக்கிறார். (புறம்9) இதிலிருந்து இப்புறப்பாடல் தோன்றும் பொழுது பஃறுளியாறும், குமரிமலையும், கபாடபுரமும் கடலால் அழியவில்லையெனத் தெரிகிறது.



## புதிய வழக்கறிஞர்


திரு. மு. திருநாவுக்கரசு, நீதி அரசர் திரு. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த திரு. முத்தையா தம்பதிகளின் மூத்த மகனான இவர் சட்டக் கல்லூரியில் மூன்று தங்கப் பதக்கங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிக் சமூகத்துக்கான தங்கப்பதக்கத்தையும் தமிழ் பேச்சு வன்மைக்காகப் பரிசாகப் பெற்றுள்ளார்.

தொடர்ச்சியாக நாலாண்டுகள் [illegible] சட்டக் கல்லூரி விவாதக் குழுவில் அங்கம் வகித்து இறுதியாண்டில், அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இறுதியாண்டு மாணவனாக இருந்தபோது சட்டக்


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா அறிஞர் ஆனது எங்ஙனம்?

காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை, முதலில் வெறும் அண்ணாதுரையாகவே இருந்தார். பிறகு தான் அறிஞர் அண்ணாதுரையென்றும், அதன் பிறகு அறிஞர் என்றும் ஆனார்.

ஆனால், அவர் அறிஞர் அண்ணாதுரை ஆனது எப்பொழுது? அவருக்கு அறிஞர் பட்டத்தைக் கொடுத்தது யார்? என்ற விவரங்கள், சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பான அவரது வாழ்க்கைச் சித்திரம் நிகழ்ச்சியிலிருந்து தெரிந்தது.

அப்பொழுது கல்கி ஆர். கிருஷ்ணமூர்த்தி உயிரோடிருந்தார். கலைத் தலைவராகக்கொண்ட ஒருபொதுக் கூட்டத்தில் டலர், பல விஷயங்களைக் குறித்துப் பேசவதாக இருந்தது. அந்தக் கூட்டம் நடந்ததினம் 'கல்கி' வந்து விட்டார். ஆனால் என்ன காரணத்தாலோ சொற்பொழிவாளர்களில் அண்ணா தவிர வேறுயாரும் வெகு நேரமாகியும் வரவில்லை. கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"கல்கி" கிருஷ்ணமூர்த்தியும் பொறுமையோடு உட்கார்ந்திருந்தார். சட்டென அண்ணா 'கல்கி'யின் காதோடு காதாக ஏதோ சொல்லிவிட்டுப் பேச எழுந்தார். தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த பொருள்பற்றி மட்டுமின்றி, மற்றவர்களுக்கெனக் குறிக்கப்பட்டிருந்த பல பொருள்களைப் பற்றியும், வெகு அழகாகவும், மிகத் தெளிவாகவும் சொன்மாரிபொழிந்துவிட்டுஅமர்ந்தார். கரகோஷம் சபையையே அதிரச்செய்தது.

அதன்பின் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி எழுந்தார். 'நான் பேசவேண்டுமென்பதையே மறந்து வியப்புக் கடலில் ஆழ்ந்துபோயிருக்கிறேன். அப்படிப் பட்ட ஒரு நிலைமையை அன்பர் சி. என். அண்ணாதுரை தமது அரிய சொற்பொழிவால் ஏற்படுத்திவிட்டார்.

''இப்படி பல பொருள்களைப்பற்றி, முன் தயாரிப்பின்றி முன் அறிவிப்பின்றி, தட்டுத் தடங்கலின்றி விரிவாக யாராலும் பேசமுடியாது. பொருள்கள் என்றால் எப்படிப்பட்டவை? ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாதவை. இப்படிப்பல வகைப்பட்ட விஷயங்களைப் பற்றியும் விரிவாகப் பேசக்கூடிய இவர் சாதாரண அண்ணாத்துரை அல்ல. அறிஞர் அண்ணாத்துரையாகவே எனக்குப் படுகிறது. இவரை அறிஞர் அண்ணாத்துரை என்றே எல்லோரும் அழைப்பது மிகமிகப் பொருத்தம், என்று கூறிய போது, சபையோர் அதை ஆரவாரத்துடன் ஆமோதித்தனர். அன்றிலிருந்து அவர் அறிஞர் அண்ணாதுரை ஆனார்.

---

### கடல் கோள்

தமிழகத்தில் மூன்று கடல் கோள்கள் அடுத்தடுத்துத் தோன்றி கடல்நீர் நாட்டிற் புகுந்து நிலப்பரப்பை, மக்களை, தமிழ்ச் சுவடிகளை அழித்துவிட்டன என்றும் அது நடந்த காலம் 3000ம் 6000ம், 9000ம் ஆண்டுகளாயின எனவும் கூறப்படுகிறது. மேலை நாட்டினர் இதை மறுத்து இரண்டே கடற் கோள்கள்தான் எனவும் அவை 5000 ஆண்டுகளுக்கு முன்பும், 2000 ஆண்டுகளுக்கு முன்பும் எனக் கூறுகின்றனர். இதைக் கொண்டு ஆராய்வோம். தமிழ் நூல்களின் அழிந்த காலத்தையே நம்மால் அறிய முடியாதபோது அது தோன்றிய காலத்தை எவ்வாறு அறிவது? அதற்கு முன்னே இலக்கணம் தோன்றிய காலம்? அதற்குமுன்னே உரை நடை தோன்றிய காலம்? அதற்கு முன்னே எழுத்து தோன்றிய காலம்? அதற்கு முன்னே மொழி தோன்றிய காலம் எப்போது? என்பதை எவர் எவ்வாறு அறிந்து கூற இயலும்? ஏதேனும் கூறவேண்டுமானால் தமிழ்மொழி தோன்றிய காலத்தை அறிந்து கூறுவது மனித அறிவிற்கு அப்பாற்பட்ட ஒன்று என்றே கூறியாகவேண்டும். இதுகாறும் கூறியவாற்றால் தமிழின் தொன்மைச் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

திசை எட்டும் திரிவதற்கு முன்னேயும் பின்னேயும் இந்த வையம் நற்றமிழாய் அமைந்த நாளே!

தொண்டு திகழ்ந்ததனைத் தும் அறிந்துள்ள தொல்புவி வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்!

---

### கொழும்பு இந்துக்கல்லூரி சிங்களமயம் ஆகிறதா?

இரத்மலானையில் அமைந்துள்ள இந்துக்கல்லூரிபடிப்படியாக சிங்களமயமாகி வருகிறதா? இக்கேள்வி கொழும்பு வாழ் தமிழ் மக்களிடம் பரபரப்பை எழுப்பியுள்ளது.

கடந்தவாரம் இக்கல்லூரியில் கட்டப்பட்டுள்ள ஓர் புதிய கட்டடத்தில் சிங்கள ஆரம்ப வகுப்புக்கள் கல்வி அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டன.

தமிழிலும் ஆரம்பவகுப்புக்கள் தொடக்கப்பட வேண்டுமென்று பல தமிழ்ப் பிரமுகர்களும் பெற்றோர்களும் விடுத்த கோரிக்கையை அமைச்சர் நிராகரித்துவிட்டதாக தெரிகிறது.


இக்கல்லூரி சிங்களமயமாவதற்கு, கல்லூரி அதிபரின் உறுதியற்ற போக்கே காரணம் என்று பெற்றோர்கள் கருதுகின்றனராம்.

---

கல்லூரி இந்து மன்றத்தின் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

சட்டக் கல்லூரி முதன் முதலாக நடத்திய முன்னுத்தமற்ற பேச்சுப் போட்டியிலும் முதற் பரிசைப் பெற்றுக் கொண்டவர் இவரே. இவர் மேலும் பல அரசியல் மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் பிரபல்யம் வாய்ந்தவர் ஆவர்.

---




### காஞ்சி

முன்னாளிலே தமிழ் நாட்டில்—இன்பம்
மூழ்கிக் கிடந்த அம் முதுநிலமீதில்
தென்னவன் பாண்டிய நாடு—சோழன்
திருநாடு சேரனின் வளமலை நாடு
மன்னவர் வாழ் கொங்கு நாடு—கடல்
மகிழ்ந்து திகழ் பழந் தமிழ்ஈழ நாடு
பொன்வயல் சூழ் தொண்டை நாடு—யாவும்
புகழ் தோய்ந்தன என்றே புகல்வன ஏடு!

கோடி அழகிலே ஆடி—நின்று
கூத்திடும் இந்நிலம் அத்தனையுள்ளும்
ஓடிநெளிந்தே நடக்கும்—பெண்ணை
ஒத்தனவால்இரு மாநதி கண்டு
சூடினர் பெண்ணை எனும்பேர்!—ஆங்கு
தோய்ந்தேஅப் பெண்ணை அணைத்ததோர் தேயம்
ஈடிலை யற்றது கண்டீர்! —தொண்டை
என்னும் எழில்நிலம் பொன்னிலம் என்பாம்!

பண்டை நாளில் இளந்திரையன்—ஆனைப்
படைகள் குவிந்து நெடுமுகிற் கூட்டம்
கொண்ட வானமெனத் தோன்றும்!—அங்கே
குதிக்கும் புரவிகள் மின்போற் குதிக்கும்!
சண்டை மறவர்தம் மூச்சு — புயல்
தன்னை நிகர்க்கும்! தேர் இடி போல் நடக்கும்!
தொண்டை நிலம்பழ நாளில்— வீரம்
தோய்ந்து கிடந்த தமிழ் நிலமன்றோ!

நூறு புகழுடை நாடு!—தொண்டை
நூல்கள் புகழ்ந்து வழுத்திய தேசம்!
வீறுமிகு தொண்டை நாட்டில்—மானம்
வீரம் இவற்றின் விளைநிலம் காஞ்சி!
நாறு பிணக்களம் தோய்ந்தே — வென்றி
நாவாயிரங் கண்ட வாளாயிரங் காண்!
சீறு புலிகளின் நாடு...! — காஞ்சி
தேடிவரும்பகை வர்சுடுகாடு!

பொல்லாப் புலிகேசி யானை — வென்று
புகழொடும் போயவன் போர்ப்படை யானை
எல்லாம் சிறைகொண்டு வந்து—கற்கள்
இழுத்துப் பறித்தே தெருக்கள் அனைத்தும்
வல்ல கலைக்கோயில் ஆக்கி— ஓங்கு
வானெலாம் சிற்பம் வளர்த்தே மகிழ்ந்து
பல்லவன் செந்தமிழ் நாட்டில் — தூய
பைந்தமிழ் மைந்தனாய் வாழ்ந்த தாய்நாடு!

வாழைக் குலைகளைப் பேர்லே— நெல்லின்
வைரக் கதிர்கள் நிறைந்த வயல்மேல்
கூழைக் கொணர்ந்தவள் ஆங்கே-பாய்ந்து
கொத்தப் பறந்த கொடுநாகமீது
காலை மடித்தே அடிக்கும் -- வீரம்
கண்டு பயங்கிக் களித்தோர் உழவன்
தோளை அவளுக் களித்தே - மேனி
தொட்டுத்தொட் டுக்காதல் தோய் நாடு காஞ்சி!

மண்மிசை உள்ளவர்க் கெல்லாம்—ஆடை
மகிழ்வுற நெய்து கொடுப்பவன் வீட்டில்
தன்னுடை யான்தறி முன்னே—இல்லாள்
சாய்ந்து தமிழ்க்கதை கூறத் தலைவன்
பொன்மகள் மேனியின் ஆடை—சற்றுப்
போக்கி வெறியொடு காதல் புரிந்து
பின்னும் பிறர்க்குடை நெய்யும்—காதற
பெருநெசவாளர் உறைகாஞ்சி நாடு!

நீள நெடுந்தெருத் தோறும்—பெண்ணார்
நின்று நின்றுநடந் தாரெனத் தேர்கள்
கோலமுடன் நடை கொள்ளும்!—நாளும்
கோயில் விழாக்கள் நிறைந்து குலுங்கும்!
மேளம் ஒலிப்பன வீதி!—கோலம்
மினிர்ந்து கிடப்பன பைந்தமிழ் முற்றம்!
காலந் தொறும் மகிழ்கோடி—கண்டு
களித்துக் களித்துக் கிடப்பது காஞ்சி!

கல்லை மலையினை ஒக்கும்—வீரக்
காளையர் நெஞ்சமும் காலைப் போழ்தின்
மெல்லிய பூவினை ஒக்கும்—தூய
மெய்யுணர்வாளர் அறவோர்தம் நெஞ்சம்
எல்லையிலாதவான் ஒக்கும்—கற்றோர்
எழில்மிகு நெஞ்சமும் ஏந்திச் சிரித்தே
நல்லெழிற் கோலங் கொடுக்கும்—காஞ்சி
நாடொன்றே நாடென்ற சொல்நாளும் நிற்கும்!

வாளுக்கோர் பரஞ்சோதி வீரன்!—ஆட்சி
வலிமைக்கோர் மாமன்னன்... பல்லவ மல்லன்!
ஊழுக்கும் மருந்தொன்று காணும்—சூழ்ச்சி
ஒன்றிலே வல்லோன்சாணக்கியன் ஒருவன்
நாலுக்கும் அறிவுக்கும் ஒருவன்—அந்நாள்
நூறு புகழ்கொண்டு விளங்குதின் னுகன்!
வாழத் திகழ்ந்த பொன்னாடு!—காஞ்சி
வரலாறு புகழ்மலை இடைவாழும் ஆறு!

திங்களைப் போலொளிர் நாடு! - காஞ்சி
தெய்வீக மானிடர் வாழ்தெய்வ நாடு!
சங்கராச் சாரியார் நாடு! - காஞ்சி
தமிழ்கொண்டு தெய்வத்தின் தாள்பாடும் நாடு!
தங்கத் தமிழ்த்தாயின் நாடு! - காஞ்சி
தன்னிகரில்லா தமிழ்த்திரு நாடு!
[illegible] ஞடு - காஞ்சி
மணிநாடு! புகழுக்கோர் தனிநாடே அம்மா!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

# தமிழுக்கு சமவுரிமை பெறும்வரை தனிச் சிங்கள எதிர்ப்பு ஓயாது

யில் தேசிய அரசாங்கம் ஏற்பட்ட நேரத்தில், வடக்கு கிழக்கில் சிங்களம் மட்டும் கிடையாது; சிங்களத்துடன் தமிழும் நிர்வாகமொழியாக்கப்படும் என்ற நிபந்தனையின்பேரில்தான் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களும் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்தனர். இதை எவரும் மறுக்கமுடியாது.

அந்நிபந்தனையின் படிதான், தமிழையும் வடக்கு, கிழக்கில் சட்டபூர்வமாக நிர்வாக மொழியாக்கும் விதிகள் 1966 சனவரி 8ம் திகதி சனப்பிரதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், வடக்கு கிழக்கில் தமிழும் சிங்களமும் நிர்வாக மொழிகள் என்ற அந்தஸ்து சட்டபூர்வமாக கிடைத்திருக்கிறது. இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் இரு மாகாணங்களில் சிங்களமும் தமிழும்; ஏழு மாகாணங்களில் தனிச்சிங்களம் என்றநிலை பிறந்தது; வடக்கு கிழக்கில் சிங்களம் மட்டும் சட்டம், சட்டபூர்வமாக நீக்கப்பட்டு விட்டது.

## தற்காலிக ஏற்பாடு

கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு மேலும் கிடைக்க வேண்டியதற்கு போராடுவோம் என்ற சிந்தனையின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியினரும் தமிழ் பேசும் மக்களும் இந்நிலையை தற்காலிகமாக ஏற்றுக் கொண்டனர்.

ஆனல் இதன் பொருள் தனிச்சிங்களச் சட்டத்தை நிரந்தரமாக ஏற்றுக் கொண்டதாகாது. தன்மானம் மிக்க எந்தத் தமிழனும் தனிச்சிங்களத்தை எதிர்த்து கடைசி வரை போராடியே தீருவான்.

முதலில் இருமாகாணங்களிலும் தமிழுரிமையைபேச்சுவார்த்தை மூலம் பெறுவோம்— பின்னர் ஏனைய ஏழுமாகாணங்களிலும் போராட்டத்தின் மூலம் தமிழுரிமையை நிலை நாட்டுவோம் என்ற கருத்துடன் தான்தமிழரசுக்கட்சிசெயற்பட்டது.

இன்று தமிழ் மொழி விதிகள் முறையாக அமுல் நடத்தப்படவில்லை—அதற்கான இறைசேரி அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. தனிச் சிங்களத்திணிப்பு மறைமுகமாகவும் நேரடியாகவும் அதிகரித்து வருகிறது.

நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்திலே தமிழ்த் தாய்மார்கள் ஆஸ்பத்திரிகளில் தாங்கள் படும் பிரசவ வேதனையைக்கூட தமிழில் எடுத்துக் கூறி பரிகாரம் காணமுடியாதவாறு தனிச் சிங்கள மருத்துவத் தாதிமார்கள் நிறைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழுக்காக மீண்டும் போராட்டத்தில் குதிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தமிழினமும் தமிழரசுக்கட்சியும் தள்ளப்பட்டு வருகிறது.

ஆகவே நாட்டின் பொறுப்பான பதவியிலிருக்கும் பிரதமர், தனது வீரப்பிரதாபங்களை காட்டுவதாகக் கருதிக்கொண்டு இத்தகைய ஆத்திரமூட்டும் கருத்துக்களை வெளியிட்டு, தமிழ்மக்களின் விரோதத்தை மேலும் வளர்த்துக் கொள்வது புத்திசாலித்தனமல்ல வென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேம்.

இத்தகைய வீரப்பிரதாபங்களை விடுத்து, தமிழ்மொழிச் சட்டவிதிகளை அமுல் நடத்துவதற்கு வேண்டிய இறைசேரி அறிக்கைகளை வெளியிட்டு வடக்கு கிழக்கில் தமிழை நிர்வாகமொழியாக நடைமுறையில் கொண்டுவர பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும். சியவச, ஜாதிகபொல போன்ற சிங்களச் சொற்களை தமிழர்களிடம் திணிப்பதையும், சிங்களத் தேர்ச்சியடையாத தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு கல்தா கொடுப்பதையும் பிரதமர் கைவிட வேண்டும். இவற்றைச் செய்வதால், தமிழ்மக்களின் அன்பைப் பிரதமர் பெற முடியுமே தவிர, 'இராணுவத்தைக் கொண்டும் முந்திய ஆட்சியாளர்களால் தமிழர்களிடம் சிங்களத்தை திணிக்க முடியவில்லை. நான் அமைதியாக அதைச் செய்துமுடித்துவிட்டேன்' என்ற ரீதியில் பேசுவதால் தமிழ்மக்களின் விரக்தியைத்தான் சம்பாதித்துக் கொள்ளமுடியும்.

## செல்வா கூற்று

அண்மையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாச யாழ்ப்பாணம் சென்றிருந்தபொழுது அவருக்கு இறுதியாக அளிக்கப்பட்ட ஓர் வரவேற்புபசாரத்தில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் நறுக்குத்தெறித்தாற் போல கூறிய வார்த்தைகளை பிரதமரது கவனத்துக்கு இங்கு கொண்டு வருகிறேம். தமிழரசுத் தந்தையின் கருத்துக்கள் தான் இந்நாட்டுத் தமிழர்களின் கருத்துக்களாகும்.

திரு. செல்வநாயகம் கூறியது வருமாறு:—

''சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடன் தொகைகளை வழங்குவதால் தமிழர்களை திருப்திப் படுத்திவிடலாம் என்ற தவருன கருத்துடன் உள்ளூராட்சி அமைச்சர் இங்கிருந்து கொழும்பு திரும்பக்கூடாது'

"ஒவ்வொரு தமிழனும் நாட்டின் நிர்வாகத்தில் தனது மொழிக்குத் தகுந்த இடம் தரப்பட வேண்டுமென்று விரும்புகிறன். ஆனல் சிங்களம் மட்டும் சட்டத்தால் இந்த அபிலாஷை நசுக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிச் சட்ட விதிகள் அமுல் செய்யப் படாமலிருக்கிறது.

"தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து பெறும் வரை தமிழரசுக் கட்சி தனது போராட்டத்தை தொடரும்"

---

1ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழரசு சார்பில் அண்ணு சமாதிக்கு அஞ்சலி

திரு. இராசதுரைபேரறிஞர் அண்ணுவின் நெருங்கியநண்பர் என்பதும் அண்ணுவின் பகுத்தறிவுக் கொள்கை இலங்கையில் பரவுவதற்கு மூலகாரணமாக விளங்கியவர் என்பதும் தெரிந்ததே:

திரு. இராசதுரை தமிழக முதல்வர் திரு: மு. கருணுநிதி, இரா: நெடுஞ்செழியன், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். திருமதி இராணி அண்ணுதுரை ஆகியோரைச் சந்தித்து தமது அனுதாபங்களைத் தமிழரசுக்கட்சி சார்பிலும் தமது சார்பிலும் தெரிவித்துக் கொண்டார்;

---

## எங்கே நீபோ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது திடீர் என எழும்பிய அலையொன்றில் அந்த உருவம் மறைந்தது. இருந்தும் ரகு மலைந்தளரவில்லை. ஐந்து வயதிலிருந்து கடந்த இருபது வருடங்களாகத் தான் நீந்தி விளையாடிய கடல் தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கையில் நீரோடு நீராக மூழ்கி சுழியோடத் தொடங்கினன், சில மணி நேர போராட்டத்தின் பின் அவன் கைகளில் ஏதோ கனமாகத் தட்டுப்பட்ட போது அவன் அந்தப் பொருளைக் கெட்டியாகப் பிடித்து இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டு நீரின் மட்டத்திற்கு வந்து நீந்தத் தொடங்கினன். ஒரு மணி நேரம் கடலுடன் போராடியதால் ஏற்பட்ட களைப்பு அவனை மிகவும் வேகமாக நீந்த வைத்தது. எப்படியாவது கரையை அடைந்துவிட வேண்டும் என்ற வெறியில் அவன் நீந்தத் தொடங்கினன். முடிந்தால் அந்த உயிரைக் காப்பாற்ற வேண்டும் அல்லது இருவருமே கடலுக்குள் சங்கமமாகிவிடவேண்டும் என்ற விரக்தியைப் பான்மையில் நீந்திக் கொண்டிருந்தான் அவன்.

ஒருபடியாக மரணப் போராட்டத்தின் பின் கரையேறிய அவன் அந்த உருவத்தை மணல் மேட்டில் மெதுவாகக் கிடத்தி விட்டுத் தனக்குத் தெரிந்த முதலுதவி செய்வதில் முனைந்தான். சிறுகச் சிறுக பிரக்ஞையைப் பெற்றுக் கொண்டுவந்த அந்த உருவம் சற்று அசையத் தொடங்கியதும் அவன் வெற்றிப் புன்னகையுடன் சற்றுத் தள்ளி மணல்தரையில் மல்லக்கச் சாய்ந்து தன் காலை நீட்டி ஓய்வெடுக்க முனைந்தான். அப்போது அந்த உருவத்திடம் இருந்து கிளம்பிய முனகற் சத்தம் அந்த உயிருக்கு இனி ஆபத்து இல்லை என்ற நம்பிக்கையை அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. தப்பித் தவறிக் கூட யாராவது அந்த இடத்திற்கு வந்துவிடக் கூடாது என உள்ள தெய்வங்களையெல்லாம் அவன் பிரார்த்தித்துக் கொண்டான். அந்த நேரம் இறைவனின் திருவிளையாடலை நினைத்தபோது அவனுக்கு வாய்விட்டுச் சிரிக்காமலும் இருக்க முடியவில்லை.

தான் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற துணிவுடன் வந்துதற்கொலை செய்து கொள்ள முயன்ற இன்னேர் உயிரைத் தான் காப்பாற்ற வேண்டி வரும் என்று அவன்கற்பனை கூட செய்து பார்க்கவில்லை. இப்படி திடும் என ஏற்படும் அற்புதமான செயல்களால் தான் இறைவன் ஒருவன் இன்னும் இருக்கிறன் என்ற நம்பிக்கை மக்களுக்கு அற்றுப் போகாமல் இருக்கிறது என்று எண்ணியவனுய் அந்த உருவத்தின் அருகிற் சென்று மிகவும் நெருக்கமாய் நின்று பார்த்தான். அதை விசித்திரமென்று சொல்வதா அல்லது விநோதம் என்று சொல்வதா என்று சிந்திக்கச் சில நிமிட நேரம் பிடித்தது. அவனுக்கு.

ஒரு பெண்ணை இழக்க ஏற்பட்டதால் தற்கொலை செய்யத் துணிந்த அவன் இன்று ஒரு பெண்ணை வாழ வைப்பதற்காக அந்த எண்ணத்தையே ?மாய்த்துக் கொள்ளவேண்டிய நிலையில் இருந்தான். ஆமாம்! அங்கே அவன் முன் மணல் மேட்டில் கிடந்தவள் ஒரு பெண் மணி தான். ஆனல் ஆடை அவிழ்ந்து [illegible] லமான நிலையில் [illegible] ஆடை சிறிது கூட நெகிழ்ந்து போகாதபடி அவள் கிடந்த நிலையைப்பார்த்த போது நிச்சயமாக இந்தப் பெண் தற்கொலைக்கு ஆயத்தமாக வந்திருக்கிருள் என்பது அவனுக்கு மிகவும் கவபமாகப் புரிந்தது; அவன் கண் மூடப் படுத்திருந்த அந்தப் பெண் உடலில் சூடு வந்து விட்டதா என்று பார்ப்பதற்காகத் தன் கரத்தை அவள் நெற்றில் வைத்தபோது அதுவரை பிணம்போல கிடந்த அந்தப் பெண் எழுந்து அமர்ந்து அவனைப் பார்ப்பது அந்த இருளில் கூட அவனுக்குத் தெரிந்தது.

'நீயார்... எதற்காக என்னைக் காப்பாற்றினுர்... இப்போது நீ என்னை என்ன செய்யப் போகிறுய்' என்று அந்தப் பெண் கேட்டு விட்டு வாய்விட்டுக் கதறியழத் தொடங்கிய போது ரகு பேசச் சக்தியற்று நடைப்பிணமாக நின்றுன்...!

(தொடரும்)

## யாருக்காக அழுதான்?

தமிழ் நாட்டில் பல சர்ச்சைகளை கிளப்பிக் கொண்டு திரைப்படமாக வந்ததும்—ஏற்கனவே இங்கு நடிகவேள் லடிஸ் வீரமணி குழுவினரால் மூன்று முறை அரங்கேற்றப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுமான ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான்? நாடகம் மீண்டும் எதிர்வரும் 3-3-69 மாலை [illegible] நடைபெறவிருக்கிறது.

## அண்ணுவும் நானும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ழியை தம்பியர்களின் ஆட்சி நிறைவேற்றி வைக்குமானல், இன்று என்மனத்தைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் துயரம் ஒருவாறு மறையும்.

அண்ணுவின் மரணத்தால் எனக்கேற்பட்ட துயரம் அவரது மறைவுக்குப்பின் இந்த மாபாரதம் அவர்பால் வெளிப்படுத்திய பேரன்பைக் கண்டபின் ஓரளவு குறைந்தது. தமிழர்களிலே ஒருவர்—தகுதி மிக்கவர்—ஆட்சியிலே தலைமை பெற்றவர்—தமிழிடத்துப் பற்றுடையவர்—'தமிழன்' என்ற இன உணர்வுடையவர் உலகத்தால் மதிக்கப்படுகிறர் என்பதனை பிப்ரவரி 3—4 தேதிகளில் கண்ணுரக்கண்ட போது—காதாரக் கேட்ட போது— நெஞ்சார மகிழ்ந்தேன். தமிழினத்துக்குப் பெருமை தேடித் தந்த இத்தகு தலைவனை வழங்கிய தெய்வத்திற்கு நன்றி செலுத்தினேன்: முன் எப்போதோ மறைந்துபோன கட்டபொம்மனுக்கும், என்னேடு பழகியறியாத கப்பலோட்டிய தமிழனுக்கும் சிறப்புச் செய்வதன் மூலம் உலகத்தோர் முன்னே தமிழினத்திற்குப்பெருமைதேட முயன்றேன். இன்றே, என் காலத்திலே வாழ்ந்து, என்னேடு கைகோர்த்துப் பழகி, என் சுக துக்கங்களிலே பங்கு கொண்டு நடமாடிய அண்ணுவுக்கு உலகமே அஞ்சலி செலுத்துவது கண்டு, கவலையை மறந்து, களிப்படைகின்றேன்.

பின்னணி வரலாறு ஏதுமில்லாத கென்னடி என்பார், மூன்றுண்டு காலமே பதவியிலிருந்து உலகப் புகழ் பெற்றுர். என் அருமை தண்பர் அண்ணு இரண்டாண்டு காலமே பதவியிலிருந்து— அதிலும், ஓராண்டு காலம் படுக்கையிலிருந்து—உலகப்புகழ் பெற்று விட்டார். பெரியார் ஈ. வே. ரா: கூறியதுபோல, நடக்கக் கூடாதது நடந்து விட்டது; தலைவர் ராஜாஜி தாத்தழுதழுக்கக் கூறியதுபோல, அண்ணுவின் மறைவு குறித்து வருத்தந் தெரிவிக்க வார்த்தைகள் போதா. ஒன்றுமட்டும் உறுதி. தமிழிடத்துப் பற்றுடையோர், தமிழ் உள்ளவரை அவரை மறக்க முடியாது. தமிழுக்குத் தொண்டாற்றுவது தான் அண்ணுவுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

அண்ணு பெற்றுவிட்ட உலகப் பெரும் புகழ் வேறு யாருக்கேனும் வியப்பை அளிக்கலாம். குறிப்பாக, 'தேசிய வட்டாரத்தினர்' என்று தங்களை கூறிக்கொள்வோருக்குத் திகைப்பையே தந்திருக்கலாம். அவர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள இதுதான்நல்லதருணம். தங்களுக்குள்ள அப்பழுக்கற்ற நாட்டுப் பற்றேடு, அவசியமாகத் தேவைப் படுகின்ற மொழிப் பற்றையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு ஆக வேண்டும். அண்ணுவின் மறைவும், மக்கள் அவருக்கு காட்டும் மதிப்பும் போதிக்கும் பாடம் இது. வெறும் மொழிப் பற்று உடையவரா, நாட்டுப்பற்றின் பகைவராக அண்ணு வாழ்ந்திருந்தால், மறையுங்கால் அவரது நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். ஆனல் அவர் தீர்க்கதரிசி. மாறுதல்களை அறியும் மதிநலம் படைத்தவர். தருமரீதியில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தலைவணங்கும் மாண்புடையவர்: மாறுதல்களைத் தோற்றுவிப்போருடன் தோழமை கொள்ளும் பண்புடையவர். பகைவனையும் நண்பனுக்கிக்கொள்ள முயலும் பான்மை படைத்தவர். இவ்வளவும் சேர்ந்து தான் அவர் 'அண்ணு' வானுர்!

## தமிழரசு மாநாட்டில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரல் 9ம் திகதி காலை அதிமுக்கியமான அரசியல் மாநாடும் மாலையில் பிரமாண்டமானபொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

## கலைவிழா

யாழ் மாநகரசபை அளிக்கும் பௌர்ணமி கலைவிழா இன்று யாழ் திறந்த வெளி அரங்கில் நடைபெறுகிறது: 'புதுக்குடித்தனம்' 'தம்பி கொழும்பிலே' ஆகிய நாடகங்கள் இவ்விழாவில் மேடை ஏற்றப்படுகின்றன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணா நினைவுக் கூட்டங்களால் தமிழ்ப் பகுதியில் எழுச்சி!

## கிராமங்கள் தோறும் நடக்கும் சமூக சீர்திருத்தப் பிரசாரம்!

## தமிழரசாரின் கட்டுப்பாடான நடவடிக்கைக்கு வரவேற்பு!

வட பகுதியில் நடைபெறும் அண்ணா நினைவு தினக் கூட்டங்களிலெல்லாம், அண்ணாவின் பகுத்தறிவுக் கருத்துக்களை பிரசாரம் செய்வதில் தமிழரசுக்கட்சி எம். பிக்களும் பேச்சாளர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக தீண்டாமைக்கு எதிரான பிரசாரத்திலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி தமிழினத்தை ஒன்றுபடுத்தவும், அண்ணா நினைவு தினக் கூட்டங்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. அண்ணா நினைவுக் கூட்டங்களால், சோர்ந்து கிடந்த தமிழ் இன உணர்ச்சி கொழுந்து விட்டெரியத் தொடங்கி விட்டது. தமிழ் இளைஞர்களிடையே புதிய உற்சாகமும் விறுவிறுப்பும் ஏற்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கிலுள்ள குக்கிராமங்களில் கூட அண்ணா அஞ்சலிக் கூட்டங்கள் தினேதினே நடைபெற்று வருகின்றன.

தமிழரசுக் கட்சி பேச்சாளர்களும், எம். பிக்களும் கலந்து கொள்ளும் அண்ணா அஞ்சலிக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும், அவரது பகுத்தறிவுப் பிரசார அடிப்படையில் தீண்டாமைக்கு நல்ல சவுக்கடி கிடைத்து வருகிறது. தொகுதிகள் தோறும் கிராமவாரியாக நடத்தப்பட்டு வரும் அஞ்சலிக் கூட்டங்களை ஆலயப்பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு ஆகியவை சம்பந்தமான பிரசாரத்துக்கு தமிழரசுக் கட்சியினர் பூரணமாக பயன்படுத்தி வருகிறார்கள். தீண்டாமைக்கு எதிராக இதுவரை பிரசாரம் செய்யப்படாத மிகவும் பிடிவாதமான கிராமங்களிற் கூட, தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் நுழைந்து சாதியொழிப்பின் அவசியத்தை ஆணித்தரமாக வற்புறுத்தி வருகின்றனர்.

கட்டுப்பாடான ஒரு திட்டமிட்ட பிரசார நடவடிக்கையாக தமிழரசுக் கட்சி மேற்கொண்டிருக்கும் இப்பணிக்கு பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

## அண்ணாவுக்கு சிலை நிறுவுவதை தடை செய்க!

### பிரதமருக்கு கோரிக்கை!

"இலங்கையின் எப்பாகத்திலென்றாலும் தென் இந்தியத் தமிழர்களின் தலைவரான திரு. அண்ணாதுரைக்கு சிலை நிறுவுவதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். இலங்கையில் அண்ணாதுரைக்கு சிலை நிறுவுவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கக் கூடாது. அண்ணாதுரைக்கு சிலை நிறுவுவதற்கு யாராவது அரசாங்கத்திடம் விண்ணப்பித்தால், அவ் விண்ணப்பம் நிராகரிக்கப்படவேண்டும்"

—இவ்வாறு இலங்கை வம்சாவளி வர்த்தகர் மன்றத்தின் சார்பில் திரு. ஞானசேகர சேனநாயகா என்பவர் பிரதமரிடம் கோரியுள்ளார்.

---

# அறிஞர் அண்ணாவின் இசை ஞானம்

## இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன்

சிலை திறந்து சிலையான செம்மல் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து விட்டார். அவர் மனித உள்ளங்களுள் நீக்கமற நிலைத்து விட்ட அண்ணா அவர்கள்தான். அண்ணா அவர்கள் 1941—ல் எனக்கு அறிமுகமானார். அவர்களது இசைத்திறனை நினைக்காமலும், சொல்லாமலும் எழுதாமலும் இருக்க இயலாது. தரமான பழமை மிகு இசையே நம் நாட்டில் வளர்ந்து கொண்டு இருக்க வேண்டுமென்ற ஆசை கொண்டவர் அவர்.

இசையின் நுணுக்கங்களை இரு வகையிலும் தெரிந்து கொண்ட நுண்ணிய அறிவும் ஆற்றலும் பெற்றவர் அவர். எடுத்துக் காட்டாக 1946—ல் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

வேலைக்காரி படத்திற்கு வசனம் எழுதிக்கொடுக்க கோவைக்கு வந்திருந்த சமயம். ஜூபிடர் பிக்சர்ஸின் கிருஷ்ண விஜயம் படத்தில் என். சி. வசந்தகோகிலம் அம்மையாருக்கு மட்டும் இசையமைப்பாளனாக நான் கோவை சென்றிருந்த நேரம். அப்போது தன்னால் நடத்தப்படும் (திராவிட நாடு) பத்திரிகைக்கு மிக அவசரமாக இரவில் ஒரு கட்டுரை எழுதிவிட்டார். அக்கட்டுரை காஞ்சிபுரத்துக்கு அனுப்புவதற்குள் ஒரு சந்தேகம் உதித்துவிட்டது.

டைரக்டர் திரு. ஏ. எஸ். ஏ. சாமி அவர்கள் வீட்டில் காலையில் என்னைக் கண்டவுடன் அவருக்கு ஒரு சந்தேகம் பிறந்து விட்டது. 'அதைத் தெளிவுபடுத்துவாயா' எனக் கேட்டார்கள். 'தெரிந்தால் சொல்லுகிறேன்' என்றேன். 'கட்டுரையை முடித்து விட்டேன். நான் கொடுத்துள்ள தலைப்பில் சந்தேகம்' என்றார்கள். என்ன தலைப்பு என்றேன். உடனே 'மோகன முகாரி' என்று என் கட்டுரைக்கு தலைப்பிட்டுள்ளேன் என்று 'அந்த ராகம் உள்ளதா— ஆரோகணம் அவரோகணம் உனக்கு தெரியுமா' என்றார்கள்.

எந்த மேளகர்த்தா, எந்த ஜன்யம் என்பதை யோசித்து கொண்டிருந்தேன்.

நகைச்சுவையாக அண்ணா அவர்கள் 'உனக்கு தெரியாவிடில் நானே வழி சொல்கிறேன். அப்படி செயல்படுத்த முடியுமா? என்று பார்' என்றார்கள். மலைத்துப் போனேன்.

பின் 'தலைப்பு 'மோகன முகாரி' எனவே ஆரோகணத்தை மோகனத்திற்கு உள்ள சுரங்களையும், அவரோகணத்திற்கு முகாரிக்குடைய சுரங்களையும் செயலாற்றி காட்டு' என்றார்கள். நாம் வெட்கித் தலைகுனிவோடு உடன் அவர்கள் விரும்பியபடி செயலாற்றினேன்.

அதனை ரசித்ததுடன், மேற்கொண்டுபல விவரங்களையும் இசைக்கு எடுத்துக் காட்டாக கூறினார்கள்.

அண்ணா அவர்கள் இசைத் துறைக்கு செயலாற்ற வந்திருந்தால் அநேக இசை அமைப்பாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை அப்போதே முடிவு செய்து கொண்டேன்.

அடுத்து 1957ல் தனது இல்லத்தில் ஆத்மார்த்தமாக ஒரு நாள் என்னைப் பாடச் சொன்னார்கள்; பாடிக்கொண்டே வந்தேன். இடையில் நிறுத்தச் சொன்னார்கள். நிறுத்திய இடத்திலிருந்து மீண்டும் பாடச் சொன்னார்கள். ஒன்றுமே தோன்றவில்லை. நான் பாடியபாடலின் அனுபல்லவி 'மங்காத எழுசரம் தம் கார்வையில் பிறந்து மாறி மாறி வெகு ராகங்களாய் சிறந்த (சிங்காரச் சுவை) என்ற முழுப் பாடலையும் மேககல்யாணி ராகத்தில் நான் அமைத்துள்ள இசையின் முறைப்படி பாடிக்கொண்டு இருந்தேன்.

நான் தெரிந்து கொள்ளவில்லை என்பதை நன்கு அறிந்து கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் பாடலின் கருத்துக்கேற்ப இசை இருந்தால் பாடல் எந்த அளவிற்கு கேட்கும் ரசிகர்களுக்கு இன்பத்தை அள்ளித் தரும் என்பதை விளக்கம் செய்தார்கள்.

மங்காத எழுசரம் தன் கார்வையில் பிறந்து மாறி மாறி வெகு ராகங்களாய் என்ற பதத்தை மாறி மாறி என்று வருகையில் மாற்றி மாற்றி பல ராகங்களை நீ பாட வேண்டாமா என்றார்கள்.

அன்றிலிருந்துஇன்றுவரை அவர்கள் கூறியபடி பல இசை அரங்குகளில் செயலாற்றுகையில் ரசிகர்கள் அந்த இடத்தை மட்டும், [illegible] கையில், நான் அண்ணா அவர்களை மனக்கண் முன் நிறுத்திக் கொள்வது, என்பது என் உளமறிந்த ஒன்று.

அப்படிப்பட்ட இசைமேதை என்பாது என்னால் மறைக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாகும். அந்த உண்மையினை இன்று சொல்லாமலோ, எழுதாமலோ, நினைக்காமலோ இருக்க முடியவில்லை.

மற்றோர் எடுத்துக் காட்டு அண்ணா அவர்களை பலர் பல கண்கொண்டு பார்த்து வந்தவர்கள், என்னை பொறுத்தமட்டில் இசைக் கண்கொண்டே பார்த்து வந்தேன்.

1967ல் முதல் அமைச்சரான உடன் அவர்கள் தலைமை செயலகத்தில் ஆற்றிய முதல் உரையில் உயர் அதிகாரிகள் அனைவரையும் மற்று முன்னோரையும் புதிய ராகங்களையும் புகுத்தவேண்டும். அதே போன்று புதிய தாளங்களையும் புகுத்த வேண்டும் இரண்டும்எளிமையானதாகவும் இருக்கவேண்டும். கடுமையாக இருக்கக் கூடாது என்று பொது மக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், இடையே உள்ள இணைப்பினை, இசையினை அடிப்படையாகவும் உவமையாகவும் எடுத்துக் காட்டாகவும் கூறி சொற்பொழிவு ஆற்றினார்கள்.

எனவே அறிஞர் அண்ணா அவர்கள் சகல துறைகளிலும் ஆராய்ந்து கொண்டே இருந்தவர்கள். எந்தெந்தத் துறைகள் எந்த எந்த அளவில் அவரின் எண்ணத்திற்கு வெற்றியை தந்துதவின என்பதுவும் ஒரு ரகசியமாகவே அந்த அறிஞர் கோமானின் வாழ்வில் உள்ளது. அவர்களைப்பற்றி சொல்லிக் கொண்டே இருக்கலாம்; எழுதிக் கொண்டே இருக்கலாம். இன்றும் என்றும் நினைத்துக் கொண்டே இருக்கும் தன்மை பெற்று விட்டார்கள். அந்தப்புனித ஆத்மாவின் புனித உள்ளம் சாந்தி அடைய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு யானும் என் குடும்ப வழித் தோன்றல்களும் அன்னார் பாதங்களுக்கு வணக்கங்களை அர்ப்பணிக்கிறோம்.

வாழ்க அவர்கள் உள்ளம்; வளர்க தொண்டு. வெல்க அவர்கள் இலட்சிய எண்ணங்களும் பணியும்.

---

## 'ஹிம்மத் கருத்து'

அண்ணா அவர்களது சிறப்பு அவருடைய நேர்மையில் அடங்கியுள்ளது. அண்ணா எப்பொழுதும் தனக்கு இல்லாத சிறப்பினை இருப்பதாகப் பாசாங்கு செய்பவர் அல்லர். அவருடைய தனித்த நேர்மை அவரை ஒரு ராஜதந்திரியாக ஆக்குவதற்கு வழி வகை செய்தது.

"ஹிம்மத்"

(தலையங்கம்-7-1-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுலகில் அண்ணா

(சென்ற இதழ் தொடர்)

நேருஜி-: (வந்துகொண்டே) என்ன சிலையைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபட்டுள்ளீர்கள் போலத் தெரிகிறது: யார் இவர் எங்கேயோ பார்த்த மாதிரி தெரிகின்றதே!.

அண்ணா-: எங்க பார்த்திருப்பீங்க! தமிழ் நாட்டிலே தான் பார்த்திருப்பீங்க? இன்னுமா தெரியவில்லை? நான் தான் காட்டு மிராண்டி! (நொன்சன்ஸ்)

நேருஜி-: ஓ...தி—மு—க அண்ணாவா! அன்று நான்தான் தெரியாமல் அந்த வார்த்தையை சொல்லிவிட்டேன். நீங்களுமா அதை மனதில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.!

காந்தி: எப்படி மறக்க முடியும்? மக்களை காட்டு மிராண்டிஎன்று சொன்னதை மக்கள் தான் மறப்பார்களா? மக்கள் தலைவன் தான் மறப்பானா!?

அண்ணா—: நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் தாத்தா! நேருஜிக்கு முகம் கறுத்து விட்டது பார்த்தீர்களா...?

காந்தி—: எதுஎப்படிச் சொன்னாலும் தவறு தவறுதானே அண்ணா!

கிருஷ்ணன்—: என்ன? அண்ணாவா! எங்களுக்கும் அண்ணா! அண்ணல் காந்திக்கும் அண்ணாவா...?

வன்னியசிங்கம்—: எங்கள் அண்ணா அண்ணல் காந்திக்கு மட்டுமல்ல அந்த ஆண்டவனுக்கும் அண்ணா தான்!...

நேருஜி—: எப்படியண்ணா இந்திய வெல்லாம்? பசிபட்டினி எல்லாம் போயிடிச்சா?! 'மட்ராஸ் ஸ்டேட்' எல்லாம் எப்படி?

கிருஷ்ணன்—: நேருமாமாவிற்கு சரித்திரமே தெரியாதோ...? இப்பொழுது 'மட்ராஸ் ஸ்டேட்' இல்லை அதற்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டியிருக்கிறார் நம் அண்ணன் அங்கு ஆட்சிநடாத்துவது காங்கிரஸ் அல்ல, காட்டு மிராண்டிகள்அதாவது திராவிட முன்னேற்ற கழகம்.

நேருஜி—: என்ன அண்ணா கிருஷ்ணன் மீண்டும் மீண்டும் என்மனதை புண்படுத்துகிறான்!

வன்னியசிங்கம்—: அன்று தமிழ் மக்களை நீர் திட்டிய போது எங்களுடைய இதயம் என்னபாடு பட்டிருக்கும் என்பதை சிந்தித்தீரா? அப்போது எங்கள் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்று நினைத்தீரா? உங்களுக்கும் மனசு இருக்குதா...?

அண்ணா—: தம்பி ஒருவர் செய்த தவறை சுட்டிக்காட்டிப் பேசுவது அழகல்ல. அது நமது தமிழினத்திற்கே அவமானமாகும். தன்னுடைய தவறை நேருஜி இப்போதுஉணருகிறாரே... அதுவே போதும்... (பாரதிதாசன் பாடிக் கொண்டே வருகிறார்)

பாரதிதாசன்:— பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு...

அண்ணா—! யார்... புரட்சிகவிஞரா..? நீர் இங்கேயா இருக்கின்றீர்? உம்கவிதை எல்லாம் சுன்னித் தமிழ் நாட்டில் தவழ்ந்து விளையாடுகின்றதே...! பழம் பெரும் கவிஞனே உம் பாடலை கேட்க ஆசையாக இருக்கின்றது. நீங்கள் இல்லாமல் செந்தமிழ் சீர் குலைந்து விட்டது...! தமிழகத்தில் தமிழ் கவிதையைக் கூட ஒருவரும் இயற்றுகிறார்கள் இல்லையப்பா...!

பாரதிதாசன்—: என்ன...? தமிழ் வளர்ந்த தமிழகத்தில் கவிதை புனையவா... ஆட்கள்இல்லை...? ஆச்சரியமாக இருக்கின்றதே...! அண்ணா...!

அண்ணா— ஏன் இல்லை? இருக்கிறார்கள் பணத்திற்காக பச்சை ஆபாசமாக கூட கவிதை எழுதி காசு சேர்க்கும் கவிஞர்கள். இருந்தாலும் உன் கவிதையிலுள்ள சுவை உணர்ச்சி எல்லாம் இந்த காசுசேர்க்கும் கவிஞரிடம் இருக்குமா...?

(கல்கியார் ஜோன் கென்னடியுடன் பேசிக் கொண்டே வருகிறார்)

கல்கி—: என்ன...? காசைப்பற்றிப் பேசுகிறீர்கள். இங்கேவந்துமா இந்த பணம் சேர்க்கும் ஆசை...? யார் இவர், தோளில் கறுப்புத்துண்டு. கம்பீரமான பேச்சு... யார் அண்ணாவா...?

வன்னியசிங்கம்—: நம் அண்ணன் தான். தென்னாட்டு பெர்னாட்ஷா இந்நாட்டு இங்கர்சால் என்று கூறுவீர்களே அதே அண்ணாதான்...!

கல்கி—: என்ன பெர்னாட்ஷா அவர்களே, இங்கேயும் கழகத்தைப்பற்றி பிரசாரமா..?

கிருஷ்ணன்—: ... தாச்சே கழகம். அண்ணனை வெட்டினாலும் கழகத்தின் மூச்சே அண்ணனின் உயிர் மூச்சு... என்னண்ணா...?

கல்கி—: கிருஷ்ணா...! உன் அண்ணனை பற்றி உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும்...நீ...கொஞ்சம் பேசாமல் இருக்கிறாயா...?!

கிருஷ்ணன்:- பேச்சுரிமைக்கு இங்கேயும் தடையா...? ஜனநாயகத்தின் தந்தை அண்ணா முன்னாலேயா...! இந்த அக்கிரமம்? யார் அங்கே... இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்...



அண்ணா:- கோபத்திலும் உன் நகைச்சுவை பிரமாதம்...! கிருஷ்ணா...!

கல்கி:- அவன்தான் நகைச்சுவை மன்னன் ஆயிற்றே...! சொந்தத் தொழிலை மறந்துபோவாரா...?

அண்ணா:- இந்தப் பக்கம் உம்மை காணவில்லையே என்ன செய்துகொண்டிருந்தீர்? ஏதாவது நாவல் எழுதுகிறீரோ கல்கியாரே...?

கல்கி:- (கென்னடியைச் சுட்டிக்காட்டி) "சும்மா இவருடன் பேசிக்கொண்டிருந்தேன்...அண்ணா, இவர் உங்களுடன் பேசவேண்டுமென்று உங்களைப் பற்றி நான் சொன்ன நாள் முதலாய் துடித்துக் கொண்டு இருக்கிறார். (கென்னடியைப் பார்த்து) நான் சொல்லலை இவர்தான் எங்க நாட்டு அறிவுலக மேதை...! அரசியல் ஞானி...! அறிஞர் அண்ணா!

கென்னடி:- வணக்கம் அண்ணா!

அண்ணா:- வணக்கம்...!

கென்னடி:- உங்களைப் பற்றி இவர் (கல்கியை காட்டி) எல்லாம் சொல்லியிருக்கிறார் அண்ணா...!

அண்ணா:- எனக்குத் தெரியுமே... என்னைப் பற்றி புகழ்வதுதான் அவருடைய வேலையென்று...தம்பி... சென்ற மாதம்தான் உங்கள் நாடான அமெரிக்காவிற்கு சென்றிருந்தேன். என்ன முன்னேற்றம்...! உங்கள் நாடு செல்வம் கொழிக்கும் தேசம் என்று சொன்னவர் வாய்க்கு சர்க்கரைதான் போடவேண்டும்......

கிருஷ்ணன்:- சர்க்கரையா! நான் அதை பார்த்தே பல வருடங்கள் ஆகின்றனவே... எங்கே சர்க்கரை...?

கல்கி:- கிருஷ்ணா இன்று நாமெல்லோரும் சர்க்கரை சாப்பிடத்தான் போகிறோம். அந்த சர்க்கரையை நமது அருமை அண்ணா வழங்குவார்...!

அண்ணா:- சர்க்கரையா...? அதுக்கு நான் எங்கு செல்வேன்...?

வன்னியசிங்கம்:- எங்கும் போகவேண்டாம்...உங்கள் பேச்சை கேட்டாலே சர்க்கரை சாப்பிட்டமாதிரி இருக்கும். 'இல்லையா கல்கியாரே...?

கல்கி:- பின்னே நமது வாய் இனிக்கவா? சர்க்கரை கேட்டேன்... எங்களின் காதுகள் இனிமையாக இருக்க அல்லவா...? அதற்கு அண்ணாவினால் தான் முடியும்...!

வன்னியசிங்கம்:- கிருஷ்ணன் எங்கே ஆளையே காணம்...

கல்கி:- அவனைநான்தான் அனுப்பி வைத்தேன் அண்ணனுடைய பேச்சை தேவர்களும் கேட்கட்டுமே யென்று... இப்ப அவன் இந்திரன் மாளிகையில் நிற்கிறானே...!! என்னவோ...?


நல்லை பத்மநாதன்

(கிருஷ்ணன் தேவலோகத்தில் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறான்.)

கிருஷ்ணன்:- மதிப்புக்குரிய தேவலோக மக்களே...! இன்று நமது அண்ணன் தமிழக முதல் அமைச்சர், அறிவுலக மேதை அண்ணா அவர்கள் பூலோகத்திலிருந்து இங்கு விஜயம் செய்ததை பாராட்டுமுகமாக ஒரு விழா நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவிற்கு தேவலோக மக்கள் மட்டும் கலந்துகொள்ளும்படி மிகத்தாழ்மையாகவேண்டிக்கொள்கிறேன். பின் வருவோர் அண்ணனைப் பாராட்டிப் பேசுவார்கள். நகைச்சுவை மன்னன் என். எஸ். கே., தமிழ்த்தென்றல் வி. கல்காணசுந்தரன், ஆசிய ஜோதிநேருஜி, அண்ணல் காந்தி, புரட்சி கவிஞர் பாரதிதாசன், அமரர் வன்னியசிங்கம், அமரர் கல்கி. இக்கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் வேறு யாருமல்ல நான்தான். என். எஸ். கே...



நெற்செய்கை சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்வதற்காக, இம்பீரியல் கெமிகல் இன்டஸ்ரீஸ் (யூ.கே.)லிமிடெட் தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உலகம் முழுவதும் பரந்த மாநாடு கடந்த 18ம் திகதியிலிருந்து 21ம் திகதி வரை ஹொட்டல் தப்பிரபேனில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியா, ஜப்பான், மலாயா, தாய்லந்து, பிலிப்பைன்ஸ், ஐக்கிய இராச்சியம், இலங்கை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தியப் பிரதிநிதி டாக்டர். வாட்ஸ்ஸ்பாட்விக் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக கெமிகல் இண்டஸ்றிஸ் (கொழும்பு) லிமிடெட் அதிபர் திரு. கே.ஓ. கோல்மெயர் கலந்து கொண்டார்.



புதிய, 75,000 ரூபா பரிசுத் தொகை கொண்ட யானை மார்க் குளிர்பானப் போத்தல் மூடிப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மொறட்டுவை, டிசொய்ஸாரோட், 50 இல. கட்டடத்தைச்சேர்ந்த திரு. ஜி. மெண்டிஸ் தனது பரிசுத் தொகையான 1,500 ரூபாவைக் கோருவதற்காக கடந்த 7ம் திகதி,முதலாவது சரியான சிவப்பு,கறுப்பு ... மூடிக்கோவையுடன் எலிபன்ட் ஹவுசுக்கு வந்திருந்தார்.

## மு. க. வுக்கு வாழ்த்து

மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றம் பின்வரும் வாழ்த்தை கலைஞர் மு. கருணாநிதிக்கு அனுப்பியுள்ளது.

தமிழ் நாட்டுத் தமிழ் மக்களும், கடல் கடந்து வாழும் பல்கோடி தமிழ் மக்களும் இன்னல் பலவற்றிற்கு ஆளாகித் தவிக்கிறார்கள். அவர்கள் அனைவரின் கண்ணீர் துடைக்கும் 'காக்கும் எம் காவலனாய் காண் பரிய பேரொளியாய்' கருணாநிதி அவர்கள் வீற்றிருந்து வியத்தகு பலவாற்றி, விண்ணும் மண்ணும் வாழ்த்த, நிலைத்த புகழோடு நிலமிசை நீடு வாழ்கவென விடுதல் அறிவிருப்போடு வாழ்த்துகிறோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4-வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது

தினமும் 2, 6, 9-30 மணி:

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜயா (மட்டுநகர்) வெம்பிளி (கண்டி)



ஸ்ரீதரின்

100 நாள் விழாக்கொண்டாடிய
மற்றொரு அழகிய
ஈஸ்மன் கலர் சித்திரம்

சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா, எல். விஜயலக்ஷ்மி, முத்துராமன், குமாரி சச்சு, வி. கே. ராமசாமி, நாகேஷ், பாலையா.

— நடித்த —

# ஊட்டிவரை உறவு

(பாஸ்கள் சலுகைள்கரத்து)

## 8-வது வாரமாக காட்சி தருகிறது!

லிடோ (பொரளை)

ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்! (தகழி சிவசங்கரம்பிள்ளையின்)

ஈஸ்மென் கலர்



# செம்மீன்

---

# இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது!

சென்ரல் (மருதானை)

● ஜெமினி கணேசன், ● சரோஜாதேவி,
நாகேஷ், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி
மற்றும் பலர் நடித்த
கே. எல். கோபாலகிருஷ்ணனின்

# பணமா? பாசமா?



## எமது அடுத்த வெளியீடு!!

ஜெய்சங்கர், எல். விஜயலட்சுமி, அசோகன், நாகேஷ், பண்டரிபாய், முத்தையா மற்றும் பலர் நடித்த
பவின் பிக்சர்ஸ்

# அன்பு வழி

டைரக்ஷன்: நடேசன்

இசை: எம். எ. விஸ்சுவநாதன்

---

ஜனத்திரள் நிறைந்த தியேட்டர்களில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
விலாஸினி (தெகிவளை)
இம்பீரியல் (மட்டுநகர்)
கிங்ஸ் (பதுளை)
நெல்சன் (திருகோணமலை)
ரீகல் (கண்டி)



* முத்துராமன்
* நாகேஷ்
* ராஜ்ஸ்ரீ
* ஜயபாரதி
—நடிக்கும்—

# அனுபவி ராஜா அனுபவி

## 6-வது ஜனத்திரள் வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) ஈரோஸ் (பாமன்கடை)
ஜூசிமா (கிராண்பாஸ்) வின்சர் (யாழ்ப்பாணம்)
அசோகா (புத்தளம்)

★ எம். ஜி. ராமச்சந்திரன்,
* ஜெயலலிதா,
● நம்பியார்
● ராஜ்ஸ்ரீ
மற்றும் பலர் நடிக்கும்

# குடியிருந்த கோயில்

(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-வருடம் பெப்ரவரி மாதம் ... திகதி ... அச்சிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org